RNINUMBER:TNTAM/2018/75087

# மெட்ராஸ் மணி

MADRAS MANI | DAILY TAMIL | தைரியம் மற்றும் நெறிமுறை பத்திரிகை | PUBLISHED FROM - CHENNAI


01.06.2026 (திங்கட்கிழமை) பக்கங்கள் 8 விலை 5.00 மணி 8 | ஓசை 71

Facebook/dailymadras@gmail.com | dailymardras@gmail.com

5 மேற்கு வங்கத்தில் பரபரப்பு: திரிணாமூல் எம்.பி. மீது தாக்குதலுக்கு மம்தா பானர்ஜி கடும் கண்டனம்



6 தெற்கு ஆசியாவில் சக்தி வாய்ந்த நாடு இந்தியா அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் கருத்து




8 பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: இகா ஸ்வியாடெக் முன்னேற்றம்



கர்நாடக அரசை கண்டித்து

# மேகதாது பகுதியில் டெல்டா விவசாயிகள் முற்றுகை

## போலீசார் குவிப்பு; பதற்றம் – பரபரப்பு

**சென்னை, ஜூன்.1–** காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதைதடுத்துநிறுத்த வலியுறுத்தி மேகதாதுப் பகுதியில் தமிழக டெல்டா விவசாயிகள் இன்று முற்றுகை போராட்டம் நடத்தினார்கள். இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டதால் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்ட கர்நாடக அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு தமிழக அரசு, விவசாயிகள் மற்றும் அரசியல் கட்சியினர் என அனைத்து தரப்பிலும் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இந்த நிலையில், இந்தத் திட்டத்திற்கு தடைகோரி தமிழக அரசு தற்போது தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் புதிய வழக்கை தொடர்ந்துள்ளது.

சுற்றுச்சூழல் விதிகளை மீறும் மேகதாது அணை திட்டத்துக்கு சூழல் அனுமதியை தர மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கு தடைவிதிக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேகதாது அணை திட்டத்திற்கு எதிராகத் தமிழக அரசு தொடர்ந்த சீராய்வு மனுவை உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தள்ளுபடி செய்தது. கர்நாடகாவின் விரிவான திட்ட அறிக்கை இன்னும் பரிசீலனை அளவிலேயே இருப்பதால், இப்போதே தடை கோருவது முன்கூட்டிய நடவடிக்கை என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது. இருப்பினும், கர்நாடகா தரப்பில் அணைக் கட்டுமானத்திற்கான 'பூமி பூஜை' நடத்த ஆயத்தப் பணிகள் நடப்பதாகத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் விஜய், காவிரி நதிநீர் மற்றும் சட்ட வல்லுநர்களுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தின் உரிமையையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் காக்க உடனடி சட்ட நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

உச்சநீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து, இம்முறை சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை பாதுகாப்புச் சட்டங்களை முன்வைத்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. அந்த மனுவில், மேகதாது அணைகட்டப்பட்டால், காவிரி வனவிலங்கு சரணாலயத்தின் பெரும்பகுதி மற்றும் ஆயிரக்கணக்கான ஏக்கர் அடர்ந்த காடுகள் தண்ணீரில் மூழ்கும் அபாயம் உள்ளது.

இந்த வனப்பகுதியில் உள்ள யானைகள், புலிகள் மற்றும் அரிய வகை உயிரினங்களின் வாழ்விடங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும். உரிய சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் வனத்துறை அனுமதிகள் இல்லாமல் கர்நாடக அரசு பணிகளைத் துவங்க முயல்வது சட்டவிரோதம் என கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே மேகதாது பகுதியில் அணை கட்டும் கர்நாடக அரசின் செயலைக் கண்டித்து, முற்றுகை போராட்டம் நடத்தப்போவதாக தமிழகடெல்டாவிவசாயிகள் அறிவித்திருந்தனர்.

இந்தப் போராட்டத்தை கர்நாடக அரசு அணை கட்ட முயற்சிக்கும் மேகதாது பகுதியில் நடத்த முடிவு செய்திருந்தனர். அதைத் தொடர்ந்து இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக தஞ்சாவூரிலிருந்து நேற்று தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தினர் பேரணியாக புறப்பட்டனர்.

அதற்காக நேற்று காலை தஞ்சாவூர் பெரிய கோயில் முன்பாக உள்ள மாமன்னன் ராஜராஜ சோழன் சிலைக்கு மாலை அணிவித்து அங்கிருந்து தங்களது வாகன பேரணியை தொடங்கினர். இந்தப் பேரணியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து திருச்சி, நாமக்கல், சேலம், தர்மபுரி, வழியாக அவர்கள் ஓசூர் சென்றடைந்தனர்.

அங்கிருந்து இன்று காலை மேகதாது பகுதிக்குச் சென்று முற்றுகை போராட்டம் நடத்தினர். இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அசம்பாவித சம்பவம் எதுவும் நடைபெறாமல் தடுக்க ஏராளமான போலீசார் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடக அரசு மேகதாது அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும். தமிழகத்துக்கு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி கர்நாடக அரசு மாதாந்திர நீர் பங்கிட்டை வழங்க வேண்டும். இரு மாநில விவசாயிகளின்நலனைகருத்தில் கொண்டு ராசி மணல் என்ற இடத்தில் அணை கட்ட அனுமதி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

# மியான்மர் அதிபர் இந்தியா வருகை

## பிரதமர் மோடியுடன் இன்று பேச்சு

**புதுடெல்லி, ஜூன் 1** அண்டை நாடான மியான்மர் அதிபர் மின் ஆங் லயிங், இந்தியாவுக்கு 5 நாள்கள் அரசு முறைப் பயணமாக நேற்று வந்தார். பீகார் மாநிலம், கயை நகரை வந்தடைந்த அவர், டெல்லியில் நாளை (ஜூன் 1) பிரதமர் மோடியுடன் இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

மியான்மரில் உள்நாட்டுப் போருக்கு இடையே கடந்த டிசம்பர், ஜனவரியில் நடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, புதிய அதிபராக முன்னாள் ராணுவ தளபதி மின் ஆங் லயிங் தேர்வு செய்யப்பட்டார். கடந்த ஏப்ரலில் பதவியேற்ற இவர் 5 நாள்கள் அரசு முறைப் பயணமாக இந்தியாவுக்கு சனிக்கிழமை வந்தார். மியான்மர் அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், தொழில் துறையினர் உள்ளிட்டோரும் வருகை தந்துள்ளனர்.

பீகார் மாநிலம், கயை விமான நிலையத்தில் வந்திறங்கிய அதிபரை மாநில ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) சையது அட்டா ஹஸ்னைன், மாநில அமைச்சர் விஜய் குமார் சின்ஹா ஆகியோர் வரவேற்றனர். பின்னர், கயையில் உள்ளபுகழ்பெற்றபவுத்த மததலமும், யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய சின்னமுமான மகாபோதி கோயிலில் அதிபர் வழிபாடு நடத்தினார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்ட வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால், 'மியான்மர் அதிபர் மின் ஆங் லயிங்கை புத்த கயைக்கு வரவேற்கிறோம். அவரது வருகை, இரு தரப்பு ஆன்மிகம், வரலாறு மற் றும் மக்கள் ரீதியிலான தொடர்பையும், வலுவான ஒத்துழைப்பையும் பிரதிபலிக்கிறது' என்று குறிப்பிட்டார்.

கயையில் இருந்து டெல்லிக்கு விமானம் மூலம் சென்ற அதிபர் லயிங்கை வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்திவர்தன் சிங் வரவேற்றார். டெல்லியில் ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகளில் லயிங் பங்கேற்கவுள்ளார். பிரதமர் மோடியை திங்கள்கிழமை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.



எல்லைப் பாதுகாப்பு, இணைப்பு வசதிகள், வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகள் சார்ந்த விவகாரங்கள் குறித்து இருவரும் விரிவாக ஆலோசிக்கவுள்ளனர். தொழில் துறை சார்ந்த கூட்டத்தில் பங்கேற்க, மியான்மர் அதிபர் செவ்வாய்க்கிழமை மும்பைக்கு பயணிக்கவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி வரி 15 சதவீதமாக உயர்வு

# தங்கத்துக்கான தேவை 70 சதவீதம் வரை சரிவு

**புதுடெல்லி,ஜூன்.1–** மத்திய அரசு தங்கம் மீதான இறக்குமதி வரியை 6–லிருந்து 15சதவீதமாக உயர்த்தியதை அடுத்து, இந்திய நகை சந்தையில் தேவை 70சதவீதம் வரை சரிந்துள்ளது.

மேற்கு ஆசிய போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்வு, ரூபாய் மதிப்பு சரிவு ஆகியவை அந்நியச் செலாவணி கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.



இதை சமாளிக்க கடந்த மே 13–ம் தேதி தங்கம் மீதான இறக்குமதி வரியை 6– லிருந்து 15சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. ஜிஎஸ்டி வரிகளையும் சேர்த்து தங்கம் மீதான ஒட்டுமொத்த வரிச்சுமை தற்போது 9.18 சதவீதத்திலிருந்து 18.45 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், மே 27–ம் தேதியுடன் முடிந்த 15 நாட்களில் தங்கத்தின் தேவை சுமார் 7.5 டன்னாகக் குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் சுமார் 25 டன்னாக இருந்தது. அதாவது, இறக்குமதி வரி உயர்த்தப்பட்டதால் தங்கத்தின் தேவை 70சதவீதம்குறைந்துள்ளதாக புள்ளி விவரம் கூறுகிறது. இது குறித்து இந்திய தங்க நகைக் கடை உரிமையாளர்கள் சங்கத்தின் (ஐபிஜேஏ) தேசிய செயலாளர் கரேந்திர மேத்தா கூறும்போது,

"இந்தியாவின் தங்க வர்த்தகத்தில்கிட்டத்தட்ட 65 சதவீதத்தைக் கொண்டுள்ள ஒழுங்கமைக்கப்படாத துறை இந்த வரி உயர்வால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது" என்றார். கச்சா எண்ணெய் மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ள நிலையில், இந்த வரி உயர்வும் சேர்ந்து கொண்டதால் நுகர்வோரின் வாங்கும் ஆர்வம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழில் துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஜோயாலுக்காஸ் நிறுவன தலைவர் ஜோய் ஆலுக்காஸ் கூறும்போது, 'அதிக இறக்குமதி வரி மட்டுமே தேவையை பாதிக்கவில்லை. தங்கம் வாங்குவதைத் தற்காலிகமாகத் தவிர்க்குமாறு பிரதமர் விடுத்த வேண்டுகோளும், சுப காரியங்களைத் தவிர்க்கும் 'அதிக் மாசம்' காலமும் இந்த மந்தநிலைக்குக் கூடுதல் காரணங்களாக அமைந்துள்ளன. அத்துடன் முதலீட்டு நோக்கில் தங்கம் வாங்குவது கூட குறைந்துள்ளது' என்றார்.

மாநிலங்களவை எம்.பி. பதவிக்கான இடைத்தேர்தல்

# தமிழகம் உள்பட 10 மாநிலங்களில் 24 இடங்களுக்கு இன்று முதல் மனு தாக்கல் தொடக்கம்

### சி.வி.சண்முகம், மல்லிகார்ஜுன கார்கே, தேவகவுடா பதவிக்காலம் முடிகிறது

**புதுடெல்லி,ஜூன்.1–** தமிழகத்தில் சி.வி.சண்முகம், காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மதச்சார்பற்ற ஜனதா தள தலைவர் தேவகவுடா ஆகியோரின் பதவிக்காலம் முடிகிறது

இதையொட்டி தமிழகம் உள்பட 10 மாநிலங்களில் காலியாக உள்ள 24 மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு இன்று முதல் மனு தாக்கல் தொடங்குகிறது.

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.வி.சண்முகம் தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார்.

சி.வி.சண்முகம் ராஜினாமா செய்ததை அடுத்து ஒரு மாநிலங்களவை இடம் காலியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதேபோல முன்னாள் பிரதமரும், ஜனதா தளம் (மதச்சார்பற்ற) கட்சியின் மூத்த தலைவருமான எச்.டி. தேவேகவுடா, மாநிலங்களவையை நீண்ட காலமாக ஒரு தளமாகப் பயன்படுத்தி வருகிறார்.

கர்நாடகாவின் அரசியல் களம் மாறிவரும் நிலையில், நாடாளுமன்றத்தில் அவர் தொடர்ந்து நீடிப்பது கேள்விக்குறியாக உள்ளது.

இதே போல காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கேவின் பதவிக்காலம் முடிவடைகிறது.

. மாநிலங்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், கார்கே அரசாங்கத்தின் மிகவும் வலிமையான விமர்சகர்களில் ஒருவராக உருவெடுத்து, நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பை வழிநடத்தி வருகிறார்.

காங்கிரஸைப் பொறுத்தவரை, அவரது மீள்வருகையை உறுதி செய்வது கிட்டத்தட்ட தவிர்க்க முடியாததாகத் தெரிகிறது, ஏனெனில் மாநிலங்களவையில் அவரது தலைமை, கட்சியின் நாடாளுமன்ற வியூகத்திற்கும் பரந்த எதிர்க்கட்சி ஒற்றுமைக்கும் மையமானது என்று அக்கட்சி கருதுகிறது. மாநிலங்களவை பெரும்பாலும் அனுபவங்களின் சபையாகக் கருதப்பட்டாலும், இந்தத் தலைவர்களின் வருகையானது மாநில சட்டமன்றங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, கூட்டணி நிலவரங்கள் மற்றும் கட்சிக்குள்ளான முன்னுரிமைகள் ஆகியவற்றைப் பொறுத்தே அமையும்.

இந்த நிலையில் இந்தியா முழுவதும் 10 மாநிலங்களில் 25 எம்.பி பதவிகள் காலியாகிறது. எனவே ஜூன் 18ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும்நிலையில்நாளை முதல் ஜூன் 8ம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

ஜூன் 9ம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படும், ஜூன் 11ம் தேதி வேட்புமனுவை திரும்ப பெற கடைசி நாளாகும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கிரீன் கார்டு விதிகளில் மாற்றம்

# வெளிநாட்டினர் வெளியேறத் தேவையில்லை

## அமெரிக்கா விளக்கம்

**வாஷிங்டன், ஜூன் 1** அமெரிக்காவில் நிரந்தரமாகக் குடியேறக் கிரீன் கார்டுக்காகக் காத்திருக்கும் வெளிநாட்டினர், தங்களது விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கும் போது நாட்டை விட்டு வெளியேறத் தேவையில்லை என்று அந்நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை அதிரடி விளக்கம் அளித்துள்ளது.

அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடிவரவு சேவைகள் அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில், கிரீன் கார்டு விண்ணப்பதாரர்கள் அசாதாரண விதிவிலக்குகள் இருந்தால் ஒழிய, பொதுவாகத் தங்களது சொந்த நாடுகளுக்குத் திரும்பி அங்கிருந்தே காத்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

இது உலகெங்கிலும் இருந்து அங்கு குடியேறியவர்களிடையே, குறிப்பாகப் பணி நிமித்தமாக தங்கியுள்ள இந்தியர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் குறித்துப் புதிய விளக்கமளித்துள்ள உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை, முந்தைய கொள்கைகளில் பெரிய அளவிலான மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது. விசா காலத்தை மீறி தங்கியவர்கள் போன்ற சில குறிப்பிட்ட காரணங்களைக் கொண்ட நபர்கள் மட்டுமே சொந்த நாடு திரும்ப நேரிடும்.

தகுதியுடைய பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் அமெரிக்காவில் தங்கியிருந்தே தங்களது கிரீன் கார்டு நடைமுறைகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக வெளியான அறிவிப்பு நிர்வாக ரீதியிலான வழிகாட்டுதல் மட்டுமே என்றும், அது புதிய கட்டாயம் அல்ல என்றும் வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த முறையான விளக்கத்தின் மூலம், லட்சக்கணக்கான வெளிநாட்டுப் பணியாளர்களின் குடும்பப் பிரிவினை மற்றும் வேலைவாய்ப்புச் சிக்கல்கள் தற்காலிகமாகத் தவிர்க்கப்பட்டுள்ளன.



### தேசிய கூடைப்பந்து போட்டி

# இந்திய ராணுவ அணி இறுதி போட்டிக்கு தகுதி

**கோவை,ஜூன் 1–**

கோவை மாவட்ட கூடைப்பந்து சங்கம் சார்பில் தேசிய அளவில் நாச்சிமுத்து கோப்பைக்கான ஆண்கள் கூடைப்பந்து போட்டியும், சி.ஆர்.ஐ. பம்ப் கோப்பைக்கான பெண்கள் கூடைப்பந்து போட்டியும் கோவை நேரு விளையாட்டு மைதானம் அருகே உள்ள மாநகராட்சி உள்ளரங்கில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று அரையிறுதி போட்டிகள் நடைபெற்றது. இதில் பெண்கள் பிரிவில் முதல் அரையிறுதி போட்டியில் தென்மேற்கு ரெயில்வே அணியை எதிர்த்து, தென் மத்திய ரெயில்வே அணி ஆடியது.

இதில் தென் மத்திய ரெயில்வே அணி 6836 என்ற புள்ளி கணக்கில் எளிதாக வென்று இறுதி போட்டிக்குள் நுழைந்தது. மற்றொரு போட்டியில் கேரள மின்வாரிய அணி 9762 என்ற புள்ளி கணக்கில் மத்திய ரெயில்வே அணியை வீழ்த்தி இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. ஆண்கள் பிரிவு அரையிறுதி போட்டியில் இந்திய கடற்படை அணியும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அணியும் மோதின. இதில் இந்திய கடற்படை அணி 8767 என்ற புள்ளி கணக்கில் வென்று இறுதி போட்டிக்குள் நுழைந்தது.

மற்றொரு அரையிறுதியில் இந்திய ராணுவ அணி, இந்திய விமானப் படை அணியை 7253 என்ற புள்ளி கணக்கில் வென்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. தொடர்ந்து (ஞாயிற்றுக்கிழமை) இறுதி போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா நடக்கிறது.

### கோவா மாநில தலைவராக நியமனம்

# தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் திடீர் மாற்றம்

## சத்திய மூர்த்தி பவனில் காங்கிரசார் மோதல்



**சென்னை,ஜூன் 1–**

கரூர் எம்.பி ஜோதிமணியின் புகாரைத் தொடர்ந்து, தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் மாற்றப்பட்டார். இந்தநிலையில் சத்தியமூர்த்தி பவனில் நிர்வாகிகளுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டது.

சமீபத்தில் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டிருந்த பதிவில், "தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தொகுதித் தேர்வு மற்றும் வேட்பாளர் தேர்வில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளது.

சர்வே என்ற பெயரில் ஊழல் நடைபெற்றுள்ளது.

கட்சிக்கு நீண்டகாலம் பணியாற்றியவர்கள், வெற்றி வாய்ப்பு உள்ளவர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டனர்.

கட்சிக்குள் நடக்கும் இதுபோன்ற தவறுகள் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களின் நம்பிக்கையை குலைத்து வருகிறது. நாம் ஒரு வலிமையான எதிர்க்கட்சியாக களத்தில் நின்று போராடி வெற்றி பெற வேண்டுமானால் கட்சிக்குள் தொண்டர்கள் மாவட்ட, வட்டார தலைவர்களின் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டும்" என தெரிவித்து இருந்தார்.

ஜோதிமணியின் குற்றச்சாட்டு கட்சிக்குள் பெரும் பரபரப்பை கிளப்பியது. இதையடுத்து தமிழக காங்கிரஸ் பொறுப்பாளராக இருந்த கிரிஷ் சோடங்கரை, கோவா மாநில காங்கிரஸ் தலைவராக மாற்றம் செய்து அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கிடையே தமிழக காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை தேர்தல் தோல்வி குறித்து ஆராய, உண்மை கண்டறியும் குழு தலைவர் ஜெயக்குமார் தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், வடசென்னை கிழக்கு, மேற்கு மாவட்ட நிர்வாகிகளிடம் கருத்து கேட்பு நடந்துகொண்டிருந்தது.

அப்போது, வட சென்னை கிழக்கு மாவட்ட தலைவர் மதரமாகனியை பதவியில் இருந்து மாற்றக்கோரி, முன்னாள் மாவட்ட தலைவர் திரவியத்தின் ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோர் சத்தியமூர்த்தி பவன் வளாகத்தில் திரண்டு கோஷங்களை எழுப்பினர். அவர்களிடம், மதரமாகனியின் ஆதரவாளர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாக்குவாதம் முற்றி, இருதரப்பினருக்கும் இடையே கைகலப்பாக மாறியது. இதனால் சத்தியமூர்த்தி பவன் வளாகம் போர்க்களம் போல் காட்சியளித்தது.

அதைத்தொடர்ந்து அங்கிருந்த மூத்த நிர்வாகிகள் தலையிட்டு இருதரப்பையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர்.

### த.வெ.க. வேட்பாளரை

# விலைக்கு வாங்கித்தான் எடப்பாடி பழனிசாமி வெற்றிபெற்றார்

## அமைச்சர் அருண்ராஜ் குற்றச்சாட்டு

**ராசிபுரம்ஜூன் 1**

தேர்தலின்போது எடப்பாடி தொகுதியில்தவெக வேட்பாளரை விலைக்கு வாங்கிதான் பழனிசாமி வெற்றிபெற்றார் எனதமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தை அடுத்துள்ள கூனாவேலம்பட்டிபுதூர் பகுதியில் உள்ள புகழ் பெற்ற அருள்மிகு அழியா இலங்கை அம்மன் கோயிலில் அமைச்சர் தனது குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்து அன்னதானம்செய்தார்.தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

மருத்துவத் துறையில் மட்டுமல்லாமல் பல துறைகளில் திமுக ஆதரவாளர்கள் நிறைய பேர் உள்ளனர். அவர்கள் ஆட்சிக்கு களங்கம் ஏற் படுத்தும் வகையில் செயல்பட்டு வருவதால், இதற்கான முடிவு விரைவில் எடுக்கப்படும்.

திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு டிஜிபி இல்லாமலே ஆட்சி நடந்து வந்தது. தற்போது புதிய டிஜிபி நியமிக்கப்பட்டுள்ளதால், தமிழக சட்டம்ஒழுங்கு முழுமையாக பாதுகாக்கப்படும்.

எடப்பாடி தொகுதியில் குதிரை பேரம் மூலம் தவெக வேட்பாளரை பழனிசாமி விலைக்கு வாங்கி உள்ளார். அதன்மூலமே அந்த தொகுதி யிலேயே பழனிசாமி வெற்றிபெற்றார். எனவே, தவெக கட்சிக்கு பலர் வருவதைப் பற்றி பேச அவருக்கு தகுதி கிடையாது என்றார்.



வைகாசி விசாகத்தை முன்னிட்டு விருதுநகர் வாலசுப்பிரமணிய கோவிலில் சுவாமி, வள்ளி தெய்வானையுடன் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

# மகளிர் உரிமைத்தொகை ரூ.2,500 வழங்குவது பட்ஜெட்டில் தெரிவிக்கப்படும்

## அமைச்சர் மரிய வில்சன் பேட்டி



**நாகப்பட்டினம்,ஜூன் .1–**

மகளிர் உரிமைத் தொகையாக மாதம் ரூ.2,500 வழங்குவது எப்போது? என நிதி அமைச்சர் மரிய வில்சன் பதில் அளித்துள்ளார்.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலயத்தில் வழிபாடு

நடத்துவதற்காக தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன் நேற்று வந்திருந்தார்.

அப்போது அவர் பேராலயத்தில் பிரார்த்தனை செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தின் நிதிநிலை குறித்து இன்னும் 2 வாரங்களில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட உள்ளது. மதுரை

மாநகராட்சி ஊழல் தொடர்பாக முழு அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அதேபோல, அனைத்து தணிக்கை அறிக்கைகளும் கேட்கப்பட்டுள்ளன. மகளிர் உரிமைத் தொகை வட மாநில பெண்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. மகளிர்உரிமைத்தொகையை மாதம் ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்குவது தொடர்பாக பட்ஜெட்டில் தெரிவிக்கப்படும்.

கடந்த 2024–ல் பயிர்க் கடன் தள்ளுபடி தொடர்பாக ரிசர்வ் வங்கி சில விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. கடந்த தி.மு.க.ஆட்சி காலத்தின்போது இத்தகைய விதிமுறைகள் எதுவும் இல்லை. எனவே ரிசர்வ் வங்கியின் விதிகளை பின்பற்றித் தான் விவசாயக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துதொடர்ந்து ஆலோசனை நடைபெற்று வருகிறது. இந்தியா ஒருஜனநாயக நாடு. யார் வேண்டுமானாலும் எந்தக் கட்சியில் வேண்டுமானாலும் இணைவதற்கு முழு உரிமையும் அவர்களுக்கு உண்டு. இவ்வாறு அமைச்சர் மரிய வில்சன் தெரிவித்தார்.

### கிரிக்கெட் வீரர் தோனி மனைவி

# நடிகர் ஜெயராம் காலில் விழுந்து ஆசி பெற்றார்

## சேப்பாக்கம் மைதானத்தில் ருசிகரம்

**சென்னை, ஜூன் 1:**

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த கிரிக்கெட் போட்டியின் போது, பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் தோனியின் மனைவி சாக்ஷி, மலையாள மற்றும் தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் ஜெயராமின் காலில் விழுந்து ஆசி பெற்ற நெகிழ்ச்சியான தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

தென்னிந்தியத் திரைப்பட உலகில் பல ஆண்டுகளாக முத்திரை பதித்து வரும் நடிகர் ஜெயராம், அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் தனது வாழ்நாளில் மறக்க முடியாத ரசிகர் குறித்த நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

அப்போது அவர் கூறியதாவது:

"ஒருமுறை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் கிரிக்கெட் போட்டியைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது திடீரென என்னை நோக்கி ஓடிவந்த தோனியின் மனைவி சாக்ஷி, எனது காலில் விழுந்து ஆசி பெற்றார். 'நான் உங்களுடைய மிகப்பெரிய ரசிகை' என்றும் கூறினார். வடமாநிலத்தைச்சேர்ந்த அவர்,என்னையாரென்று தெரியாமல் காலில் விழுந்துவிட்டாரோ என்ற தயக்கத்துடன் நான் என்னை அறிமுகப்படுத்த முயன்றேன்."

சாக்ஷி தன் காலில் விழுந்ததற்கான காரணத்தை ஜெயராம் விவரிக்கும் போது:

"என் மகளைக் கவனித்துக்கொண்ட பெண்மணி கேரளாவைச் சேர்ந்தவர். அவர்என்மகளைத்தூங்க வைப்பதற்காக, நீங்கள் நடித்த 'அத்வைதம்' என்ற மலையாளப் படத்தில் இடம்பெற்ற 'அம்பல புழை உன்னி கண்ணனோடு...' என்ற பாடலைத் தான் எப்போதும் பாடுவார். அந்தப் பாடலைக் கேட்காமல் என் மகளுக்குத் தூக்கமே வராது.

அந்தப் பாடலின் வழியேஉங்களின்நடிப்பு எனக்கு மிகவும் பிடித்துப்போனது என்று சாக்ஷி கூறினார். பல ஆண்டுகளுக்கு முன்பு நான் நடித்த ஒரு படத்தின் பாடல், தோனியின் குடும்பத்தாரை எனக்கு ரசிகர்களாக மாற்றியிருப்பது எனக்குப் பெருமையாகவும், நெகிழ்ச்சியாகவும் இருக்கிறது."

இவ்வாறு நடிகர் ஜெயராம் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது குணச்சித்திர வேடங்களில் அசத்தி வரும் நடிகர் ஜெயராம் நடிப்பில், 'பரிமளா அண்ட் கோ' என்ற புதிய திரைப்படம் ஜூன் மாதம் ஐந்தாம் தேதி திரையரங்குகளில் வெளியாகஉள்ளது குறிப்பிடத்தக்கது.

### உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தில்

# ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

## கல்வி உதவித்தொகையும் வழங்கப்படுகிறது

**சென்னை, ஜூன் .1–**

உலகதமிழாராய்ச்சி நிறுவனத்தில் கல்வி உதவித் தெகையுடன் நடத்தப்படும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி வளர்ச்சிக்கென தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட உலகதமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு கற்பித்தல் மற்றும் பல்வேறு ஆராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன், தமிழ் முதுகலை பட்டப்படிப்பு, ஐந் தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தமிழ் முனைவர் பட்ட வகுப்பு ஆகியன இந்நிறுவனத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, தற்போது 2026–27 கல்வியாண்டில் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை தமிழ் பட்டப் படிப்புக்கான மாணவர்கள் சேர்க்கை நடைபெறவுள்ளன.

இந்த படிப்புகளில் சேர விரும்புவோர் சேர்க்கை தொடர்பான விதிமுறைகள், தகவல்கள் மற்றும் விண்ணப்பத்தை www.ulakaththamizh. in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நேரில் சென்றும் பெற்றுக் கொள்ளலாம். இவ்வகுப்புகளில் சேர்க்கை பெறும் மாணவர்களுள் தேர்வின் அடிப்படையில் 15 மாணவர்களுக்கு மாதந்தோறும் தமிழக அரசால் ரூ.2 ஆயிரம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

இருபாலருக்கான தனித் தனி கட்டணமில்லா தங்கும் விடுதி வசதி மற்றும் உணவு வசதி உள்ளது.

### செங்கம் அருகே அரசு பேருந்து கார் மோதல்

# விபத்தில் 2 பேர் உயிரிழப்பு; 5 பேர் காயம்

**செங்கம்ஜூன் .1–**

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே தோக்கவாடி புறவழிச் சாலையில் அரசு பேருந்தும் ஆம்னி காரும் மோதிக்கொண்ட விபத்தில் 2 பேர் உயிரிழந்ததுடன், 5 பேர் காயமடைந்தனர். பெங்களூருவைச் சேர்ந்த இரண்டு நண்பர்களின் குடும்பத்தினர், பௌர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலையில் கிரிவலம் மேற்கொள்வதற்காக ஆம்னி காரில் சென்று கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது எதிரே வந்த அரசு பேருந்தும் காரும் மோதியதில் கார் பலத்த சேதமடைந்தது.இந்த விபத்தில் காரை ஓட்டிச் சென்ற விநாயக் மற்றும் அவருடன் பயணம் செய்த ராமச்சந்திரா ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், காரில் பயணம் செய்த 5 பேர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு செங்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் நீலகண்டன் என்பவர் தீவிர காயமடைந்ததால் மேல்சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற செங்கம் காவல்துறையினர், உயிரிழந்தவர்களின்உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக செங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து தொடர்பாக செங்கம் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

மெட்ராஸ் மணி
MADRAS MANI DAILY TAMIL PUBLISHED FROM - CHENNAI
ஜீன் 01 2026 திங்கட்கிழமை

# 'சென்னை முதல் தேனி வரை...' - குற்றச் சம்பவங்களை அடுக்கி தவெக அரசு மீது பிரேமலதா விமர்சனம்

சென்னை:

''தமிழக முதல்வர் கவனம் செலுத்தி, சட்டம் - ஒழுங்கை வலுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில்நிரந்தரமானதீர்வுகளைஉருவாக்கநடவடிக்கை எடுக்க வேண்டும்'' என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் பொது மக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.

சென்னையில் 16 வயது சிறுவனுக்கு மது கொடுத்து பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக வடபழனி காவல் நிலைய தலைமைக் காவலர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவரே இத்தகைய குற்றச் செயலில் ஈடுபட்டதாக வெளியாகியுள்ள தகவல் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல், சென்னை வேளச்சேரி பேருந்து நிலையம் அருகே 61 வயது மூதாட்டி ஒருவர் காயங்களுடன் மயக்க நிலையில் கிடந்துள்ளார். அந்த மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். வயது முதிர்ந்த பெண்கள்கூட பாதுகாப்பாகவாழமுடியாதநிலைஉருவாகியுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி, 62 வயது முதியவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் மனிதநேயத்தை தலைகுனியச் செய்துள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை இந்தச் சம்பவம் மீண்டும் எழுப்பியுள்ளது.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நடைபெற்ற திருமண வீட்டில் முகமூடி அணிந்த கும்பல் ஒன்று புகுந்து அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டிய சம்பவம் சட்டம் - ஒழுங்கு நிலை குறித்து மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், கடலூர் மாவட்டம் வடலூர் அருகே மண்ணில் அரைகுறையாக புதைக்கப்பட்ட நிலையில் 30 வயது இளம் பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெண்களின் உயிர் மற்றும் பாதுகாப்பு குறித்த கவலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவது தமிழக மக்களிடையே மிகுந்த வேதனையையும் பாதுகாப்பின்மையையும் உருவாக்கியுள்ளது.

குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பாதுகாப்பாக வாழும் சூழலை உறுதி செய்வது அரசின் முதன்மை பொறுப்பாகும்.

எனவே, தமிழக அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், பாலியல் வன்கொடுமை, கொலை மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக மேலும் கடுமையான மற்றும் விரைவான தண்டனை நடைமுறைகளை கொண்டு வர வேண்டும்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றிசட்டத்தின்முன்நிறுத்தப்பட்டுதண்டிக்கப்பட வேண்டும். மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்து அரசுக்கு வாய்ப்பு வழங்கியுள்ளனர். ஆனால், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது மக்களிடையே ஏமாற்றத்தையும் வேதனையையும் ஏற்படுத்துகிறது.

தமிழக முதல்வர் நேரடியாக இந்த விவகாரங்களில் கவனம் செலுத்தி, சட்டம் - ஒழுங்கை வலுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிரந்தரமான தீர்வுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சம்பவங்களைப் பார்க்கும்போது, 'வேலியே பயிரை மேய்ந்தது' என்ற பழமொழிக்கு ஏற்ப நிகழ்வுகள் நடந்துள்ளது மிகவும் வேதனைக்குரியதும், தலைகுனிவானது'' என்று அவர் கூறியுள்ளார்.

### திருச்சுழி அருகே

# தனியார் வெடி மருந்து ஆலையில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை

**அருப்புகோட்டை, ஜூன் .1–**

விருதுநகர் மாவட்டம்,திருச்சுழி அருகே அகத்தாகுளத்தில் உள்ள தனியார் வெடி மருந்து ஆலையில் தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) அலுவலர்கள் சோதனை நடத்தினர்.

கேரள மாநிலம், கொச்சியில் கடந்த பிப்ரவரி மாதம் போலீசார் வாகனத் தணிக்கை யில் ஈடுபட்டனர். அப்போது, அந்த வழியாக வந்த லாரியை நிறுத்தி சோதனையிட்டபோது, அதில் குவாரிகளுக்கு வெடி வைக்கப் பயன்படுத்தப்படும் ஜெலட்டின் குச்சிகள், டெட்டனேட்டர்கள் இருந்தன.

பறிமுதல் செய்யப்பட்ட இந்த டெட்டனேட்டர்களில் இருந்த தொகுப்பு எண், தயாரிப்பாளர் முத்திரை குறித்து தேசிய புலனாய்வு முகமை அலுவலர்கள் விசாரணை நடத்தினர்.

விசாரணையில், பறிமுதல் செய்யப்பட்ட டெட்டனேட்டர்கள் விருதுநகர் மாவட்டம், நரிக்குடி அருகே அகத்தாகுளத்தில் உள்ள வெடி மருந்து ஆலையில் தயாரிக்கப்பட்டதும், இந்த ஆலை சேலம் ரங்கபாளையத்தைச் சேர்ந்த சந்தோஷ் சிவனுக்கு சொந்தமானது என்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, இந்த ஆலை, கிடங்கில் கேரள கொச்சின் மண்டல தேசிய புலனாய்வு முகமை டி.எஸ்.பி. முருகன் தலைமையில் 5 பேர் கொண்ட குழுவினர் சோதனை நடத்தினர். காலை 8 மணிக்குத் தொடங்கிய இந்த சோதனை மாலை 5 மணி வரை நடைபெற்றது.



சென்னை நகரில் காலை திடீரென பலத்த காற்று வீசியதில் மெரினா காமராஜர் சாலையில் புழுதிகள் பறக்க வந்த வாகனங்கள்.

# தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள் தொடரும்

## அமைச்சர் செங்கோட்டையன் தகவல்

**ஈரோடு, , ஜூன் 1**

கடந்த திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கும் மக்கள் நலத் திட்டங்கள் தொடரும் என்று வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், எம்.விஜய்பாலாஜி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர், அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சிங்கப்பெண் புதிய திட்டம் என்பதால் அதற்கான அலுவலர்கள் வேண்டும். அலுவலர்களைத் தேர்வு செய்யும் பணியால் திட்டம் தொடங்குவது தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளாக வழிபாட்டுத் தலங்கள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் டாஸ்மாக் கடை இருக்கக் கூடாது என்ற கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் தற்போது முதல்வர் ஜோசப் விஜய் பொறுப்பேற்ற இரண்டு நாள்களில் 700க்கும் மேற்பட்ட கடைகளை மூட உத்தரவிட்டுள்ளார்.

பிரதமருடனான சந்திப்பின்போது முதல்வர் மேகதாது அணை விவகாரம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்க கால அவகாசம் அளிக்காமல் அடுத்தடுத்து விவசாய சங்கம் போராட்டம் நடத் தினால் என்ன செய்வது? சிறு, குறு விவசாயிகளுக்கு தேர்தல் வாக்குறுதியாக விவசாயக் கடன் தள்ளுபடி என்று கூறினோம். அதை செய்கிறோம்.

இதில் குறை இருக்கிறது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். அது குறித்து முதல்வர் பரிசீலிப்பார்.

கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டு இப்போது நடைமுறையில் இருக்கும் மக்கள் நலத் திட்டங்கள் தொடரும். கோவை சிறுமி கொலை வழக்கில் விரைவாக தண்டனை பெற்றுத் தருவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### மொழி நமது ஆணிவேர்

# தாய்மொழி தெரியாவிட்டால் அவமானம்

## ஆளுநர் ஆர்.வி. அர்லேக்கர் பேச்சு

**சென்னை, ஜூன் 1:**

இந்தியா வளர்ந்த நாடாக மாற நம்மால் இயன்ற பங்களிப்பை அளிக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு தமிழக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் அறிவுறுத்தினார்.

சென்னை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற சிக்கிம், கோவா மாநிலங்கள் உருவான தின விழாவில் ஆளுநர் ஆர்.வி.ஆர்லேக்கர் பேசியதாவது:

தமிழகத்தில் வசிக்கும் சிக்கிம், கோவா மாநில மக்களிடமிருந்து அவர்களின் பண்பாடு, பாரம்பரியம், மொழியை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இதேநேரத்தில், நம்முடைய சொந்த மொழி, கலாசாரத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

கோவா அலுவல் மொழி மாற்றம்: நான் கோவா மாநில பேரவைத் தலைவராக பொறுப்பேற்றபோது, மாநிலத்தின் அலுவல்மொழியாக ஆங்கிலம் இருந்தது. இதை கோவா மாநில மக்களின் மொழியான கொங்கணியில் மாற்றினேன். அதுமுதல் இதுவரை கொங்கணி மொழிதான் கோவா சட்டப்பேரவையின் அலுவல் மொழியாகஉள்ளது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த சிலர், எனக்கு ஆங்கிலப் புலமை இல்லை என்று குற் றஞ் சாட்டினர். எனக்கு ஆங்கிலப் புலமை இல் லாமல் இருக்கலாம். அது ஒன்றும் என்னுடைய தாய் மொழி இல்லை. இதனால் நான் அவமா னப் பட வேண்டிய அவசியமும் இல்லை. கொங்கணி மொழி தெரியவில்லை என்றால்தான் அவ மானப்பட வேண்டும்.மொழி நம்முடைய ஆணி வேர்:இந்தியாவில் ஒரே மொழியைச் சேர்ந்த 2 பேர் சந்தித்துப் பேசும் போது, அவரவர் தாய் மொழியிலேயே உரையாட வேண்டும். மொழி என்பது நம்மு

டைய ஆணிவேர் என்பதை நாம் உணர வேண்டும். நாம் அனைவ ரும் இந்தியர்கள்.

இந்தியாவின் எந்த மாநிலத்துக்குச் சென்றாலும் அந்த மாநிலத்தவராகவே நடந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் இருந்தால் தமிழராக இருக்க வேண்டும்.

பிரதமர் மோடியின் கனவு:நாட்டின் நூற்றாண்டு விடுதலை நாளில், இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டும் என்ற கனவு பிரதமர் மோடிக்கு உண்டு. அது மோடி ஒருவரின் கனவு மட்டு மல்ல.ஒவ்வொரு இந்தியரின் கனவு. எனவே, இந்தியாவளர்ந்த நாடாக மாற நம்மால் இயன்ற பங் களிப்பை அளிக்க வேண்டும். இதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும் என்றார் ஆளுநர்.

கலைஞர்களுக்குப் பாராட்டு: முன்னதாக, சிக்கிம் மாநிலத்தின் 'தமாங் செலோ' என்ற நாட்டுப்புற கலைஞர்களின் பிரம்மாண்டநடன நிகழ்ச்சி நடைபெற்றது.

இதேபோல, கோவா மாநில எஸ்ஜிஎஸ் சபாவின் மகளிர் பிரிவு சார்பில் 'சூடி பூஜை' மற்றும் கோவா நடன நிகழ்ச்சி நடைபெற்றது. பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்த இவ்விரு கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைஞர்களுக்கு, ஆளுநர் ஆர்.வி.ஆர்லேக்கர் பரிசு வழங்கிப் பாராட்டினார்.

நிகழ்வில், தமிழக ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆர். கிர்லோஷ்குமார், கோவா மாநில எஸ்ஜிஎஸ் சபாவின் துணைத் தலைவர் பால கிருஷ்ண ராவ், நிர்வாகக் குழு சூர்யகாந்த் ஷெனாய், சிக்கிம் மற்றும் கோவா மாநிலங்க ளின் பிரதிநிதிகள், மக்கள் மாளிகை அலுவலக அதிகாரிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வண்டலூர் உயிரியல் பூங்காவில் கம்பீரமாக காட்சியளிக்கும் ஆசியச் சிங்கம். வார இறுதி நாட்களில் இதைக்காண குவியும் பார்வையாளர்கள்.

### ராஜபாளையம் அருகே

# பெண்ணிடம் நகையை அபேஸ் செய்து கொலை மிரட்டல்

## 3 பேருக்கு வலை வீச்சு

**ராஜபாளையம், ஜூன்.1**

ராஜபாளையம் அருகே தளவாய்புரத்தை அடுத்த கீழபஜார் பகுதியைச் சேர்ந்தவர் நம்பி ராசத்தி (48). இவர் அதே பகுதியிலுள்ள ஆரம்பப்பள்ளியில் ஆயா வேலை செய்து வருகிறார்.

இவருக்கு தங்கத்துரை என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அவரிடம் சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான தங்கநகையை அடகுவைத்து கொடுக்கும்படி கொடுத்துள்ளார். நகையை வாங்கிச் சென்றவர் திரும்பி வரவில்லையென கூறப்படுகிறது.

இதையடுத்து பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த தங்கத்துரையிடம் நகையை திருப்பி தரும்படி கேட்டதற்கு அவரது நண்பர்களுடன் சேர்ந்து அவதூறாக பேசியதுடன் கொலை மிரட்டல் விடுத்தனராம்.

இது குறித்து தளவாய்புரம்காவல்நிலையத்தில் நம்பி ராசாத்தி புகார் அளித்தார். புகாரின் பேரில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து தளவாய்புரத்தைச்சேர்ந்த தங்கத்துரை, முகவூர் செந்தில்குமார் (என்ற) ஆட்டோ செந்தில், மாரியப்பன் என்ற சிலிண்டர் ஆகியோரை காவல் துறையினர் தேடிவருகின்றனர்.

### திண்டுக்கல் சிறுமலையில்

# பலாப்பழம் விளைச்சல் அதிகரிப்பால் விலை சரிவு

## விவசாயிகள் கவலை

**திண்டுக்கல் ஜூன் 1**

திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ளசிறுமலை பலாப்பழத்திற்கு என தனி மகத்துவமும். மற்ற மாவட்டங்களில் விளையும் பலாப்பழத்தை விட இங்கு விளையும் பலாபழமானது அதிக இனிப்பு சுவை கொண்டது.

இங்கு சுமார் 5000க்கும் மேற்பட்ட மலை விவசாயிகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிரதான தொழில் மலை சார்ந்த விவசாயமே ஆகும். சிறுமலையில் கனிகளில் பிரதான கனிகளான சிறுமலை வாழையும், பலாவும் அதிக அளவில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

சிறுமலையின் சிறப்பு அம்சமே வாழையும், பலாப்பழமும் தான். வழக்கமாக பலாப்பழ சீசன் ஆனி, ஆடி மாதம் தொடங்கும். தற்பொழுது ஒரு மாதம் முன்னதாகவே சீசன் தொடங்கியுள்ளது. இதையொட்டி சிறுமலை சந்தையில் பலாப்பழம் விற்பனை களைகட்ட துவங்கியுள்ளது. சிறுமலை பலாப்பழத்திற்கு என தனி மகத்துவமும் உண்டு. மற்ற மாவட்டங்களில் விளையும் பலாப்பழத்தை விட இங்கு விளையும் பலா அதிக சுவை கொண்டது

இந்த ஆண்டு விளைச்சல் அதிகரித்துள்ள காரணத்தினால் ரயில் நிலையம் அருகே உள்ள சிறுமலை பழ மார்க்கெட்டிற்கு பலாப்பழ வரத்து அதிகரித்துள்ளது வரத்து அதிகரித்துள்ள காரணத்தினால் விலை குறைந்துள்ளது

நன்கு விளைந்த பலாப்பழம் 300 முதல் 500 வரை ஏலம் போன நிலையில் தற்பொழுது மூன்று கிலோ எடை கொண்ட பலாப்பழம் நூறு ரூபாய்க்கு மட்டுமே விற்கப்பட்டு வருகிறது திண்டுக்கல் சிறுமலை பல மார்க்கெட்டிற்கு

அதிக அளவில் வெளியூர் வியாபாரிகள் ஏலம் எடுப்பதற்கு வருவது வழக்கம். பண்ருட்டி, கொல்லிமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விளைச்சல் இந்த ஆண்டு அதிகரித்துள்ள காரணத்தினால் வெளியூர் வியாபாரிகள் ஏலம் எடுக்க ஆர்வம் காட்டவில்லை

இதனால் சிறுமலை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு வரும்

# குடிநீரின் அளவு விநாடிக்கு 30 கன அடியாக குறைப்பு

## தட்டுப்பாடு ஏற்படாது என அதிகாரிகள் தகவல்

**சிதம்பரம், ஜூன் 1**

கடலூர் மாவட்டம், வீராணம் ஏரியில் நீர் இருப்பு குறைந்ததால், சென்னை குடிநீர் தேவைக்கு அனுப்பப்படும் நீரின் அளவு விநாடிக்கு 30 கன அடியாகக் குறைக்கப்பட்டது. சென்னைக்கு ஜூன் மாதம் முழுவதும் ஏரியிலிருந்து நீர் அனுப்பப்படும் என்பதால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காட்டுமன்னார்கோவிலில் உள்ள வீராணம் ஏரிக்கு, கீழணையிலிருந்து வடவாறு வழியாக தண்ணீர் வருகிறது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் மேட்டூர் அணை திறப்பதற்கு முன்னரே வீராணம் ஏரிக்கு தண்ணீர் வந்தது. இதனால் கோடைகா லத்தில் ஏரியின் நீர்மட்டம் குறையவில்லை. இதனால் சென்னைக்கு குடிநீர் அனுப்பும் பணியில் தட்டுப் பாடும் ஏற்படவில்லை. நிகழாண்டு வீராணம் ஏரிக்கு தண்ணீர் அனுப்பும் கீழணை தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கி றது. மேலும் கீழணையில் ஷட்டர்கள் பழுது பார்க்கும் பணியும், மேல் பகுதியில் தடுப்புச் சுவர்கள் சீரமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. அத்துடன் உபரி நீர் வெளியேற்றும் நீர் போக்கிக்கான கட்டுமானப்பணியும் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு கோடை காலத்தில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருவதால் கீழணையிலிருந்து வீராணம் ஏரிக்கு தண்ணீர் அனுப்பும் பணி மே மாதத்துக்கு முன்னதாகவே நிறுத்தப்பட்டது.

இதனால் ஏரியின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது. மேலும், கோடைகாலத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து 100 டிகிரி பாரன்ஹீட் அளவுக்கு பகல்நேர வெப்பம் தொடர்ந்து இருந்து வருவதால் வீராணம் ஏரியில் நீர் இருப்பு வெகுவாகக் குறைந்துள்ளது.

சனிக்கிழமை நிலவரப்படி ஏரியின் நீர் மட்டம் 43.87 (மொத்த கொள்ளளவு 47.50)அடியாக இருந்தது. அதாவது 1465 மில்லியன் கன அடியில் 649 மில்லியன் கன அடி நீர் உள்ளது. சாகுபடி பணிகள் நடைபெறாததால் விவசாயத்துக்கும் தண்ணீர் திறக்கப்படவில்லை.

ஏரியிலிருந்து சென்னை குடிநீ ருக்காக விநாடிக்கு 70 கனஅடி வீதம் நீர் அனுப்பப்பட்டு வந்தது. தற்போது ஏரியின் நீர்மட்டம் குறைந்ததால் விநாடிக்கு 30 கன அடி வீதம் நீர் சென்னைக்கு அனுப்பப்படுகிறது.

தற்போது தேக்கப்பட்டுள்ள தண்ணீர் சென்னை குடிநீருக்கு மட்டுமே அனுப்பப்பட்டு வருவதால் ஜூன் மாதம் முழுவதும் தட்டுப்பாடு இன்றி அனுப்பப்படும் என பொதுப்பணித் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டால் ஏரிக்கு நீர் வரத்து அதிகரிக்கும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### ஆரல்வாய்மொழி அருகே

# மினி லாரி மீது கார் மோதி 2 பெண்கள் உள்பட 3 பேர் பலி

## போலீசார் விசாரணை

**நெல்லை, ஜூன்.1**



நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகே உள்ள சிறுமளஞ்சி பகுதியைச் சேர்ந்தவர் துரைச்சி, கிஷோர், சிவகாமி இவர்கள் 3 பேரும் ஒரு காரில் புறப்பட்டு நாகர்கோவில் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். காரை டிரைவர் சுரேஷ் என்பவர் ஓட்டி வந்தார். இதையடுத்து கார் காவல்கிணறு பகுதியை தாண்டி வெள்ளமடம் பைபாஸ் சாலையில் வந்துகொண்டிருந்தது. அப்போது கார் எதிர்பாராத விதமாக டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது . பின்னர் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த மினி லாரி மீது கார் அதிவேகமாக மோதிவிபத்துக்குள்ளானது. இந்தபயங்கரமோதலில் காரின் முன்பகுதி அப்பளம் போல் நொறுங்கி காரில் இருந்தவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி துரைச்சி, கிஷோர், சிவகாமி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து ஆரல்வாய்மொழி போலீசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திலேயே பலியானவர்களின் உடல்களை மீட்ட போலீசார், பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


## பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்

BAJAJ FINANCE

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், C/o பஜாஜ் ஆட்டோ லிமிடெட் காம்ப்ளக்ஸ், மும்பை புனே சாலை, அகுர்டி, புனே 411035. கார்ப்பரேட் அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், புனேஅகமத்நகர் சாலைக்கு அருகில், விமான் நகர், புனே 411014. கிளை அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், ஸ்ரீ ராம் ஹார்டுவேர் 125A, காமரா நகர், ராஜபாளையம் 626117, தமிழ்நாடு மற்றும் பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், என்.ஆர்.கே.ஆர் தெரு, தங்கமயில் ஜூவெல்லரிக்கு பின்புறம், சிவகாசி 626123, தமிழ்நாடு. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள்: பெயர்: யு. ராஜேஸ்வரன், மின்னஞ்சல் முகவரி: u.rajeswaran@bajajfinserv.in, அலைபேசி எண்: +91 8939057555

**பின் இணைப்பு IVA [விதி 8 (6)இன் நிபந்தனையைப் பார்க்கவும்]**

**SARFAESI சட்டம் 2002இன் கீழ் மின்ஏல விற்பனை அறிவிப்பு**

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 ("சட்டம்")இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனை**

பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் ("BFL") நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டு, சட்டத்தின் விதிகளின் கீழ் BFLஇன் கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைவசப்படுத்தப்பட்ட, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிணையச் சொத்தானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை வசூலிப்பதற்காக ஏலம் மூலம் விற்கப்படும் என்பது குறித்து, பொதுமக்களுக்கும், கடன் வாங்கியவர்கள்/கூட்டுக் கடன் வாங்கியவர்கள்/அடமானம் வைத்தவர்கள் ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பிணையச் சொத்தானது, கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகளின் ("விதிகள்") விதி எண் 8 மற்றும் 9இன் கீழ், "உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே, உள்ளபடியே, மற்றும் என்ன இருக்கிறதோ அப்படியே" என்ற அடிப்படையில் விற்கப்படுகிறது.

| | மின் ஏலத்தின் விவரங்கள் |
|---|---|
| கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் முகவரி | **1.செந்தில்முருகன்** T R/o. எண் 2 38 சந்தங்காடு வேதாரண்யம் Tk பஞ்சநதிகுளம் மேற்கு நாகப்பட்டினம் தமிழ்நாடு 614714 மேலும் R S (பழைய) 97/6 R S எண். (புதிய) 97/6D, 97/6E பஞ்சநதிக்குளம் (மேற்கு) கிராமம் வேதாரண்யம் **2 தக்கத்தூர் தாலுக்கா** S RO.4710 Prop. **செந்தில்முருகன்** T R/o. எண் 38 சந்தங்காடு வேதாரண்யம் பஞ்சநதிகுளம் நாகப்பட்டினம் தமிழ்நாடு 614714 மேலும் R/o. ஆயக்காரன்புலம் சேத்தி, 3/270 சந்தங்காடு பஞ்சநதிகுளம் 1, வேதாரண்யம் சாலை, ஆயக்க அரண்புலம் சேத்தி, தமிழ்நாடு, நாகப்பட்டினம் தமிழ்நாடு 614707 **3.திருநாவுக்கரசு** S S/o **சோமசுந்தரம்** R/o. எண் 2 38 சந்தங்காடு வேதாரண்யம் Tk பஞ்சநதிகுளம் மேற்கு நாகப்பட்டினம் தமிழ்நாடு 614714 மேலும் R/o. எண் 1 38 சந்தங்காடு வேதாரண்யம் Tk பஞ்சநதிகுளம் மேற்கு நாகப்பட்டினம் தமிழ்நாடு 614714 |
| கடன் கணக்கு எண். | **P7D9PBL4629178** |
| பிரிவு 13(2)ன் கீழ் சட்டப்பூர்வ கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | 16.04.2025 தேதியிட்ட அறிவிப்பு, கோரிக்கை தொகை ரூ. 2218125/ |
| 25.05.2026 அன்றுள்ள நிலுவைத் தொகை | ரூ.2617433/ (இருபத்தாறு இலட்சம் பதினேழு ஆயிரம் நானூற்று முப்பத்து மூன்று ரூபாய் மட்டும்) |
| அசையா சொத்தின் விளக்கம் | R S (பழைய) 97/6 R S எண். (புதிது) 97/6D,97/6E பஞ்சநதிக்குளம் (மேற்கு) கிராமம் வேதாரண்யம் தாலுகா தக்கூர் SRO நாகப்பட்டினம் 614810 இன் அனைத்து துண்டு மற்றும் பார்சல் மற்றும் பொதுவான பகுதிகளில் விகிதாசாரப் பங்குடன் (Area adm. 2948 Sq.Ftmothy) நிலம்; மேற்கு: கோவிந்தசாமி வகையறா நிலம்; வடக்கு: சாலை; தெற்கு: கட்டையப்பர் தேவர் நிலம் |
| முன்பதிவு விலை (இந்திய ரூபாயில்) | ரூ.14,95,601/ (பதினான்கு இலட்சம் தொண்ணூற்றைந்தாயிரத்து அறுநூற்று ஒன்று ரூபாய் மட்டும்) |
| EMD | ரூ. 149560.1 |
| மின்ஏல தேதி மற்றும் நேரம் | 03/07/26 பிற்பகல் 2:00 மணி முதல் 4:00 மணி வரை |
| மின்ஏல இணையதளம் | https://bankauctions.in |
| EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 02/07/26 |
| ஏல அதிகரிப்புத் தொகை | ரூ.25000 |
| பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்குத் தெரிந்த பளு | அறியப்படவில்லை |
| சொத்து ஆய்வு தேதி | 01/06/26 முதல் 02/07/26 வரை வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை |

**பொதுமக்களும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்களும் கவனத்திற்கு:** இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் நடைபெறும் ஏலம், எந்தக் காரணத்தினாலாவது தோல்வியுற்றால், பிணையம் பெற்ற கடனளிப்பவர் தனது விருப்பப்படி, தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்து பிணையப் பற்றை அமல்படுத்தலாம். விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://bankauctions.in மற்றும் https://www.bajajfinserv.in/auctionnotices ஆகிய இணைப்புகளைப் பார்க்கவும்.

**தேதி: 30/05/26** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**இடம்: புனே** **பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்**



## பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்

BAJAJ FINANCE

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், C/o பஜாஜ் ஆட்டோ லிமிடெட் காம்ப்ளக்ஸ், மும்பை புனே சாலை, அகுர்டி, புனே 411035. கார்ப்பரேட் அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், புனேஅகமத்நகர் சாலைக்கு அருகில், விமான் நகர், புனே 411014. கிளை அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், ஸ்ரீ ராம் ஹார்டுவேர் 125A, காமரா நகர், ராஜபாளையம் 626117, தமிழ்நாடு மற்றும் பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், என்.ஆர்.கே.ஆர் தெரு, தங்கமயில் ஜூவெல்லரிக்கு பின்புறம், சிவகாசி 626123, தமிழ்நாடு. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள்: பெயர்: யு. ராஜேஸ்வரன், மின்னஞ்சல் முகவரி: u.rajeswaran@bajajfinserv.in, அலைபேசி எண்: +91 8939057555

**பின் இணைப்பு IVA [விதி 8 (6)இன் நிபந்தனையைப் பார்க்கவும்]**

**SARFAESI சட்டம் 2002இன் கீழ் மின்ஏல விற்பனை அறிவிப்பு**

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 ("சட்டம்")இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனை**

பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் ("BFL") நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டு, சட்டத்தின் விதிகளின் கீழ் BFLஇன் கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைவசப்படுத்தப்பட்ட, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிணையச் சொத்தானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை வசூலிப்பதற்காக ஏலம் மூலம் விற்கப்படும் என்பது குறித்து, பொதுமக்களுக்கும், கடன் வாங்கியவர்கள்/கூட்டுக் கடன் வாங்கியவர்கள்/அடமானம் வைத்தவர்கள் ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பிணையச் சொத்தானது, கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகளின் ("விதிகள்") விதி எண் 8 மற்றும் 9இன் கீழ், "உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே, உள்ளபடியே, மற்றும் என்ன இருக்கிறதோ அப்படியே" என்ற அடிப்படையில் விற்கப்படுகிறது.

| | மின் ஏலத்தின் விவரங்கள் |
|---|---|
| கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் முகவரி | **1.ராஜேந்திரன் M , S/o மாணிக்கவாசகம்** R/o. எண். 182 காதி போர்டு காலனி பிள்ளையார்நத்தம் விருதுநகர் 626125 மேலும் முகவரி:R/o. எண். 182 காதி போர்டு காலனி பிள்ளையார்நத்தம் விருதுநகர் பிள்ளையார் கோவில் அருகில் ஸ்ரீவில்லிபுத்தூர் 626125 மேலும் R/o. ராஜன் கண் மருத்துவமனை, எண். 98 1 வடக்கு கார் தெரு ஸ்ரீவில்லிபுத்தூர் தமிழ்நாடு 626125 தொடர்புக்கு: 8680926191 மின்னஞ்சல் ஐடி: dr.babyrajendran@gmail.com மேலும் R/o. D. No. 2/1/463 dr.babyrajendran@gmail.com 2/1/463A 2/1/463B 2/1/463C எஸ் எண் 1368 2 பிளாட் எண் 68 முனீஸ் நகர் ஆனையூர் கிராமம் சிவகாசி மாநகராட்சி விருதுநகர் 626124 பிளாட் எண். 68 ச. எண்.கள் 1368/2 பட்டா எண். 8412 பட்டா எஸ் எண். 1368/2ஏ4 மற்றும் எஸ் எண். 1368/2ஏ2 ஆனையூர் கிராமம் சிவகாசி தாலுகா விருதுனார் மாவட்டம் சிவகாசி 626123 தமிழ்நாடு **2.பாபியம்மா ஆர்.** வ/ஓ. எண். 182 காதி போர்டு காலனி பிள்ளையார்மடம் விருதுநகர் 626125 மேலும் R/o.எண். 182 காதி போர்டு காலனி பிள்ளையார்நத்தம் விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூர் 626125 தமிழ்நாடு தொடர்புக்கு: 9080182511 மின்னஞ்சல் ஐடி: dr.babyrajendran@gmail.com மேலும் R/o. D. எண் 2/1/463 2/1/463A 2/1/463B 2/1/463C S எண் 1368 2 பிளாட் எண் 68 முனீஸ் நகர் ஆனையூர் கிராமம் சிவகாசி மாநகராட்சி விருதுநகர் 626124 |
| கடன் கணக்கு எண். | **P450PBD3984267 & P548PBD7167336** |
| பிரிவு 13(2)ன் கீழ் சட்டப்பூர்வ கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | 26.12.2024 தேதியிட்ட அறிவிப்பு, கோரிக்கை தொகை ரூ. 62,77,348.97/ |
| 25.05.2026 அன்றுள்ள நிலுவைத் தொகை | ரூ.72,23,249.97/ (எழுபத்திரண்டு இலட்சம் இருபத்து மூவாயிரத்து இருநூற்று நாற்பத்து ஒன்பது மற்றும் தொண்ணூற்று ஏழு பைசா மட்டும்) |
| அசையா சொத்தின் விளக்கம் | D. எண். 2/1/463, 2/1/463A, 2/1/463B, 2/1/463C, S எண். 1368, 2 மனை எண். 68, முனீஸ் நகர், ஆனையூர் கிராமம், சிவகாசி மாநகராட்சி, விருதுநகர் 626124 ஆகிய இடங்களின் அனைத்து சொத்துக்களும், பொதுப் பகுதிகளில் உள்ள விகிதாசாரப் பங்குடன் (நிர்வாகப் பரப்பளவு சுமார் 900 சதுர அடி) பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளன: கடன் ஆவணங்களின்படி: கிழக்கு: மனை எண். 23ல் உள்ள சொத்து திரு. ஏ. பால்ராஜனுக்கு சொந்தமானது; மேற்கு: 18 அடி சாலை; வடக்கு: சொத்து திரு. எம். எம்.எஸ்.ஏ. பழனிசாமி நாடருக்கு சொந்தமானது; தெற்கு: மனை எண். 67. களப் பார்வையின்படி: கிழக்கு: வீடு; மேற்கு: 18 அடி சாலை; வடக்கு: காலி நிலம்; தெற்கு: வீடு. |
| முன்பதிவு விலை (இந்திய ரூபாயில்) | ரூ.31,67,834/ (முப்பத்தொரு இலட்சம் அறுபத்தேழு ஆயிரம் எண்ணூற்று முப்பத்து நான்கு ரூபாய் மட்டும்) |
| EMD | ரூ. 316783.4 |
| மின்ஏல தேதி மற்றும் நேரம் | 03/07/26 காலை 11:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை |
| மின்ஏல இணையதளம் | https://bankauctions.in |
| EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 02/07/26 |
| ஏல அதிகரிப்புத் தொகை | ரூ.25,000 |
| பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்குத் தெரிந்த பளு | அறியப்படவில்லை |
| சொத்து ஆய்வு தேதி | 02/02/26 முதல் 02/07/26 வரை வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை |

**பொதுமக்களும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்களும் கவனத்திற்கு:** இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் நடைபெறும் ஏலம், எந்தக் காரணத்தினாலாவது தோல்வியுற்றால், பிணையம் பெற்ற கடனளிப்பவர் தனது விருப்பப்படி, தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்து பிணையப் பற்றை அமல்படுத்தலாம். விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://bankauctions.in மற்றும் https://www.bajajfinserv.in/auctionnotices ஆகிய இணைப்புகளைப் பார்க்கவும்.

**தேதி: 30/05/26** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**இடம்: புனே** **பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்**

### மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில்

# பஸ்கள் இல்லாததால் பயணிகள் சாலை மறியல்

## 10 மணி நேரமாக போக்குவரத்து பாதிப்பு



**மதுரை,ஜூன்1–**
மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து சென்னை, திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், ஒசூர் மற்றும் பெங்களூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் மற்றும் அண்டை மாநிலங்களுக்கு அரசு போக்குவரத்து சார்பில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.இந்நிலையில் நேற்று இரவு 9:00 முதல் தற்பொழுது வரை சென்னை, திருச்சி, பெரம்பலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கு பேருந்து இல்லாமல் 10 மணி நேரத்துக்கு மேலாக பேருந்து நிலையத்தில் காத்திருந்த பொதுமக்கள் ஆத்திரமடைந்து மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் முன்பாக சாலை மறிய.ை ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஈடுபட்டனர். இதனால் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பேருந்துகள் பேருந்து நிலையம் முன்பாக நின்றதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

பின்னர் அங்கு வந்த மாட்டுத்தாவணி போலீசார் பயணிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி பேருந்தை ஏற்பாடு செய்து தருவதாக பேச்சுவார்த்தை நடத்தி உறுதி அளித்ததைத் தொடர்ந்து சாலை மறியலை கைவிட்டு பேருந்து நிலையத்திற்குள் சென்றனர்.இரவு முதல் அதிகாலை வரை வந்த பேருந்துகள் அனைத்திலும் நேம் போர்டுகள் ஆப் செய்யப்பட்டு வருவதாகவும் அதே போல கூடுதலாக 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை சீட்டுக்கு அதிக வசூல் செய்வதாகவும் பயணிகள் குற்றச்சாட்டு வைக்கின்றனர்.

அரசு போக்குவரத்து துறை சார்பில் இது குறித்து கேட்ட பொழுது "வைகாசி விசாகத்திற்கு கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டதால் மதுரையில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு செல்ல பேருந்துகள் குறைவாக இயக்கப்பட்டதாக தகவல் தெரிவிக்கின்றனர்.

### உடுமலை அருகே

# முட்டை வியாபாரி வீட்டில் ரூ.10 லட்சம் நகை– பணம் கொள்ளை

## மர்ம ஆசாமிகளுக்கு வலை



**உடுமலை,ஜூன்.1–**
திருப்பூர் மாவட்டம் உடுமலை வேலுச்சாமி நகர் பகுதியைச் சேர்ந்தவர் கருப்புச்சாமி (45). முட்டை வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 28ஆம் தேதி இவர் தனது குடும்பத்தினருடன் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூருக்கு சென்றிருந்தார். இந்த நிலையில் நேற்று மாலை மீண்டும் வீட்டிற்கு வந்து பார்த்த போது, முன்பக்கக் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். உள்ளே சென்று பார்த்த போது, பீரோவில் வைக்கப்பட்டிருந்த 5 லட்சம் ரூபாய் ரொக்கப் பணம், சுமார் அரை கிலோ எடையுள்ள 3 ஜோடி வெள்ளி கொலுசுகள், வெள்ளி அரைஞான் கயிறு, 4 ஜோடி தங்க கம்மல், வைரக் கம்மல், தங்க நகைகள் மற்றும் 2 லேப்டாப்கள் உள்ளிட்ட பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்ட ரொக்கப்பணம் மற்றும் நகைகள் உள்ளிட்டவற்றின் மொத்த மதிப்பு ரூ.10 லட்சம் ஆகும்.

இதுகுறித்து கருப்புச்சாமி உடுமலை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில், உடுமலை போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், உடுமலை குற்றப்பிரிவு போலீசார் மற்றும் தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று தடயங்களைச் சேகரித்துள்ளதோடு, அப்பகுதியில் உள்ள சி.சி. டி.வி. கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

### நாட்டிலேயே அதிக பணக்காரர்

# கர்நாடக புதிய முதல்வர் சிவக்குமாருக்கு ரூ.1.413 கோடி சொத்து

## 2–ஆவது இடத்தில் சந்திரபாபுக்கு ரூ.931 கோடி; 3–ஆவது இடத்தில் ஜோசப் விஜய்க்கு ரூ.648 கோடி

**சென்னை, ஜூன் 1 –**
ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் வெளியிட்டுள்ள தேர்தல் பிரமாணப் பத்திரங்களின் அடிப்படையிலான ஆய்வறிக்கையின்படி, கர்நாடகாவின் டி.கே.சிவக்குமார் நாட்டின் மிகப்பணக்கார முதல்வராகப் பொறுப்பேற்க உள்ளார். இவரைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேச முதல்வர் என். சந்திரபாபு நாயுடு மற்றும் தமிழ்நாட்டின் சி. ஜோசப் விஜய் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். இதன் மூலம் இந்தியாவின் மிக வசதியான முதல் மூன்று முதலமைச்சர்களும் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கர்நாடக மாநில முதல்வராக பொறுப்பேற்க உள்ள டி.கே. சிவக்குமாரின் மொத்த அறிவிக்கப்பட்ட சொத்து மதிப்பு ரூ.1,413 கோடியாக உள்ளது. இதில் ரூ.1,140 கோடி மதிப்பிலான அசையா சொத்துக்களும், ரூ.273 கோடி மதிப்பிலான அசையும் சொத்துக்களும் அடங்கும். மேலும் இவருக்கு ரூ.265 கோடி கடன்பொறுப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வரிசையில் ரூ.931 கோடி சொத்து மதிப்புடன் ஆந்திரப் பிரதேச முதல்வர் என். சந்திரபாபு நாயுடு இரண்டாவது இடத்திலும், ரூ.648 கோடி சொத்து மதிப்புடன் தமிழ்நாட்டின் சி. ஜோசப் விஜய் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இதற்கு மாறாக, மிகக் குறைந்த சொத்துக்களைக் கொண்ட முதல்வர்களின் பட்டியலில் ஜம்மு காஷ்மீரின் உமர் அப்துல்லா (ரூ.55 லட்சம்), ராஜஸ்தானின் பஜன் லால் சர்மா (ரூ.1 கோடி) மற்றும் ஒடிசாவின் மோகன் சரண் மாஜி (ரூ.1 கோடி) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். முன்னதாக வெளியான 2025–ஆம் ஆண்டுக்கான ஏடிஆர் பட்டியலில், சந்திரபாபு நாயுடுவைத் தொடர்ந்து அருணாச்சல பிரதேச முதல்வர் பெமா காண்டு (ரூ.332 கோடி) மற்றும் கர்நாடகாவின் முன்னாள் முதல்வர் சித்தராமையா (ரூ.51 கோடி) ஆகியோர் இருந்தனர்.டி.கே.சிவக்குமாரின் சொத்துக்கள் கடந்த சில தசாப்தங்களாகத் தொடர்ந்து கணிசமாக உயர்ந்துள்ளன.

கடந்த 2008–ஆம் ஆண்டில் ரூ.75.5 கோடியாக இருந்த இவரது சொத்து மதிப்பு, 2013–ல் ரூ.251 கோடியாகவும், 2018–ல் ரூ.840 கோடியாகவும் உயர்ந்து,

தற்போது ரூ.1,413 கோடியை எட்டியுள்ளது. இந்த சொத்து வளர்ச்சி குறித்து விளக்கியுள்ள சிவக்குமார், தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் வெளிப்படையாகவே அறிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தனது தந்தை மற்றும் பாட்டியின் உயில் வழியே தமக்கு வந்த விவசாய நிலங்கள், நிலங்களில் செய்த முதலீடுகள் மற்றும் கடந்த இரு தசாப்தங்களாக கர்நாடகாவில் நிலங்களின் மதிப்பு பல மடங்கு உயர்ந்ததே இந்த சொத்து அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார். இவருக்கு பெங்களூரு, மைசூரு, கனகபுரா மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் குடியிருப்பு சொத்துக்களும், பெங்களூரு கோபால்புராவில் வணிக வளாகத்திற்கான இடமும் உள்ளன.இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த மக்கள் பிரதிநிதிகளின் சொத்து மதிப்புடன் ஒப்பிடுகையில், அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் லீமா ரோஸ் மார்ட்டின் ரூ.5,863 கோடி சொத்துக்களுடனும், மகாராஷ்டிராவின் சட்டமன்ற உறுப்பினர் பராக் ஷா ரூ.3,383 கோடி சொத்துக்களுடனும் முன்னிலையில் உள்ளனர். இவர்களின் வரிசையில், நாட்டின் மிக அதிக சொத்து மதிப்புடைய மக்கள் பிரதிநிதிகளில் ஒருவராக டி.கே.சிவக்குமாரும் விளங்குகிறார்.



திருச்செந்தூர் கோவிலில் இன்றும் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். அவர்கள் கடலில் புனித நீராடிய காட்சி.

### ஆலங்குளம் மானூர் அருகே

# 8 பேருக்கு அரிவாள் வெட்டு சம்பவத்தில் பிரபல ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப்பிடித்த போலீசார்

## 2 போலீசாரை வெட்டியதால் நடவடிக்கை

**நெல்லை, ஜூன்.1–**
ஆலங்குளம் மற்றும் மானூர் அருகே 8 பேருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளியை பிடிக்க சென்ற தனிப்படையினரை அரிவாளால் வெட்டிய பிரபல ரவுடி மீது போலீசார் துப்பாக்கி சூடு நடத்தி பிடித்தனர்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே நெட்டூரில் நேற்று முன்தினம் நடந்த திருமண வீட்டிற்கு துணியால் முகத்தை மறைத்தபடி 3 பைக்கில் வந்த 9 பேர் கொண்ட கும்பல் அங்கு நின்று கொண்டிருந்தவர்களை அரிவாளால் சரமாரியாக வெட்டித் தள்ளியது. இதில் நெட்டூரை சேர்ந்த ரமேஷ் (49), அவரது மகன் அருள் மாறன் (23), கணேசன் மகன் சந்தோஷ்குமார் (21), காபிரியேல் மகன் ராயப்பன் (18), ஆய்க்குடி அருகே ஆனந்தபுரத்தை சேர்ந்த சேகர் மகன் ராம்குமார் (20) மற்றும் திருமணத்துக்கு மேளம் அடிக்க வந்திருந்த சாம்பவர்வடகரையை சேர்ந்த பரமசிவன் மகன் மாடசாமி (19) ஆகியோர் படுகாயம் அடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்த ஆலங்குளம் போலீசார் காயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதனிடையே காயமடைந்தவர்களின் உறவினர்கள் அங்குள்ள ஆலங்குளம் ரெட்டியார் பட்டி சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக ஆலங்குளம் போலீசார் வழக்குப்பதிந்து சிசிடிவி காமிராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். அதில் மது போதையில் இருந்த 9 பேர் கொண்ட கும்பல் நம்பர் பிளேட் இல்லாத 3 பைக்குகளில் வந்து கண்ணில் பட்டவர்களை எல்லாம் வெட்டியது தெரிய வந்தது.

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட கும்பல் அதற்கு முன் அம்பைபிரம்மதேசம் பகுதியில் மணிகண்டன் (29) என்பவரை வழிமறித்து பணம் கேட்டு மிரட்டி, அரிவாளால் வெட்டியதும், அம்பை வாகைகுளம் பகுதியில் உள்ள சிற்பக்கலை தொழிற்கூட உரிமையாளர் செல்வ கணேசன் உடைமைகளை சேதப்படுத்தியதும் தெரிய வந்தது. நெட்டூர் அரிவாள் வெட்டு சம்பவத்திற்கு பின்னர் பைக்கில் தப்பி சென்ற அந்த கும்பல் மானூர் அருகே தெற்குப் பட்டியை சேர்ந்த அப்துல் ரகுமான் (35), முபாரக் (30) ஆகியோரை அரிவாளால் தாக்கியுள்ளனர்.

இதைத்தொடர்ந்து நெல்லை, தென்காசி மாவட்ட எஸ்பிக்கள் பிரசன்னா குமார், அசோக்குமார் ஆகியோர் தலைமையில் 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அதைத்தொடர்ந்து சுத்தமல்லி அருகே பதுங்கியிருந்த இசக்கி முத்து(19) மற்றும் 3 சிறுவர்களை கைது செய்தனர். தொடர்ந்து சீதபற்பநல்லூர் பகுதியில் டிரோன் காமிரா மூலம் தேடுதல் வேட்டை நடத்தி நெட்டூரை சேர்ந்த மாரியப்பன்(20), பிரமுத்து(21) ஆகியோரையும், அம்பை பகுதியில் பிரம்மதேசத்தை சேர்ந்த நவீன்(20), சஞ்சய்(20) என மொத்தம் 8 பேரை கைது செய்தனர்.

இந்த வெறிச்செயலில் ஈடுபட்ட நபர்கள் யார்? யார்? என்பது குறித்து பிடிபட்டவர்களிடம் தனிப்படையினர் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில் முக்கிய குற்றவாளியான நெட்டூர் காந்திமதி தெருவை சேர்ந்த சண்முகையா மகன் அய்யப்பன்(21) என்பவர் முக்கூடல் அருகே உள்ள வடக்கு அரியநாயகிபுரத்தை அடுத்த அரசன் குளம் ஊருக்கு தெற்கில் பகுதியில் தாமிரபரணி ஆற்றங்கரையோரம் பதுங்கி இருப்பதாக தனிப்படையினருக்கு தகவல் கிடைத்தது. இதனால் உடனடியாக போலீசார் அங்கு விரைந்து சென்றனர்.

இதைப் பார்த்த அய்யப்பன் சுதாரித்துக்கொண்டு ஆற்றுக்குள் இறங்கி தப்பிக்க முயன்றார். அதற்குள் தனிப்படையினர் அவரை சுற்றி வளைத்து பிடிக்க முயன்றதால் ஆத்திரம் அடைந்த அய்யப்பன் மறைத்து வைத்திருந்த அரிவாளால் போலீசாரை வெட்டியுள்ளான். அதை தடுத்தபோது ஏட்டு முத்துக்குமார்(45), போலீஸ்காரர் பாலசுப்பிரமணியன்(35) ஆகிய 2 பேருக்கும் கையில் காயம் ஏற்பட்டது.


அதைத்தொடர்ந்து போலீசார் தற்காப்புக்காக துப்பாக்கியால் அய்யப்பன் மீது சுட்டதில் அவனது வலதுகால் மூட்டு பகுதியில் குண்டு பாய்ந்தது. அதனால் நிலைகுலைந்த அய்யப்பன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக சேரன்மகாதேவி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக பாளை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதையடுத்து போலீஸ் பாதுகாப்புடன் அய்யப்பனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நெட்டூரை சேர்ந்த அய்யப்பன் மீது ஏற்கனவே கொலை வழக்கு உள்ள நிலையில் அவர் பிரபல ரவுடியாக இருந்து வருகிறார். முக்கிய குற்றவாளியான அய்யப்பன் தன்னை பிடிக்க வந்த போலீசாரை அரிவாளால் வெட்டியதால் அவர் மீது போலீசார் துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### கவர்னர் நிகழ்ச்சியில்

# வள்ளுவருக்கு காவி பூசி அரசியல் ஆதாயம் தேட வேண்டாம்

## அமைச்சர் கே.ஜி. அருண்ராஜ் கடும் கண்டனம்



**சென்னை,ஜூன் 1:**
உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரை ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுருக்குவது அவரது உலகளாவிய சிந்தனைகளைச் சிறுமைப்படுத்துவதற்குச் சமம் என்றும், அவருக்குக் காவி உடை அணிவித்து அரசியல் ஆதாயம் தேட முயல்வது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல என்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கே.ஜி. அருண்ராஜ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் பங்கேற்ற அரசு விழா ஒன்றின் மேடைப் பதாகையில், திருவள்ளுவர் காவி உடை அணிந்து, நெற்றியில் திருநீறு பூசி, கழுத்தில் ருத்ராட்ச மாலை அணிந்திருப்பது போன்ற புகைப்படம் இடம்பெற்றிருந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தங்களது கண்டனங்களைப் பதிவு செய்து வந்தனர்.

இந்த நிலையில், இந்தச் சர்ச்சை குறித்து அமைச்சர் கே.ஜி. அருண்ராஜ் தனது சமூக வலைதளப் பக்கத்தில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

"திருவள்ளுவர் எந்தவொரு மதத்திற்கும், சாதிக்கும், இனத்திற்கும், நாட்டிற்கும் தன்னைச் சுருக்கிக் கொள்ளவில்லை. அவரது திருக்குறள் மனித குலம் முழுமைக்கும் பொதுவான வாழ்வியல் நெறிகளைப் பேசுகிறது. பொது இடங்களில் திருவள்ளுவருக்குக் காவி உடை அணிவிப்பது முற்றிலும் தவறான செயலாகும்.

திருக்குறளின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் கூட அவர் 'ஆதி பகவன்', 'மலர்மிசை ஏகினான்', 'அறவாழி அந்தணன்' என்று பொதுவான சொற்களையே பயன்படுத்தினாரே தவிர, எந்தவொரு குறிப்பிட்ட மதக் கடவுளின் பெயரையும் அவர் குறிப்பிடவில்லை. அவரே தன்னை ஒரு பொதுவானவராக நிலை நிறுத்தும்போது, அவருக்கு ஒரு குறிப்பிட்ட மதத்தின் அடையாளமாகப் பார்க்கப்படும் வண்ணத்தைப் பூசுவது அவரது உலகளாவிய தத்துவத்திற்கு முரணானது. மேலும், வள்ளுவர் நமக்குக் கற்றுக்கொடுத்தது "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சமத்துவத்தைத்தான் என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், வள்ளுவரை ஒரு குறிப்பிட்ட வண்ணத்திற்குள் அடைக்க நினைப்பது கடலை ஒரு குடத்திற்குள் அடைக்க நினைப்பதற்குச் சமம் என்று சாடியுள்ளார்.அவர் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் ஒரு பேரொளி என்று வர்ணித்த அமைச்சர், அவரது உடைகளின் நிறத்தை மாற்றுவதை விடுத்து, அவரது குறள் காட்டும் நல்வழியில் நடக்க முயல்வதே அவருக்கு நாம் செய்யும் உண்மையான மரியாதை என்றும், திருவள்ளுவரை யாரும் கலங்கப்படுத்த வேண்டாம் என்றும் தனது பதிவில் திட்டவட்டமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### டெல்லியில் பயங்கரம்:

# மூன்று அடுக்கு வணிக வளாகம் இடிந்து விழுந்தது

## 12 பேர் மீட்பு; இருவர் நிலைமை கவலைக்கிடம்

புதுடெல்லி, ஜூன். 1–

தெற்கு டெல்லியின் சாகேத் மெட்ரோ ரெயில் நிலையம் அருகே நேற்று சனிக்கிழமை மாலை மூன்று அடுக்கு வணிக வளாகக் கட்டடம் ஒன்று திடீரென இடிந்து விழுந்து தரைமட்டமானது. இந்தத் துயரச் சம்பவத்தில் இடிபாடுகளுக்குள் இருந்து 12 பேர் உயிருடன் மீட்க ப்பட்டுள்ளனர். அவர்களில் இருவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாகேத் பகுதியில் உள்ள சைதுலாஜாப் மேற்கு மார்க் பகுதியில் அமைந்திருந்த இந்தக் கட்டடத்தில், பல்வேறு தனியார் பயிற்சி மையங்கள், சிற்றுண்டி விடுதிகள் மற்றும் கார்ப்பரேட் அலுவலகங்கள் செயல்பட்டு வந்தன. மேலும், இதன் மூன்றாவது மாடியில் கட்டுமானப் பணிகளும் நடந்து வந்ததாகக் கூறப்படுகிறது. நேற்று மாலை சுமார் 7.45 மணி அளவில் இந்தக் கட்டடம் திடீரென பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது. கட்டடம் முழுமையாகஇடிந்து, இரும்பு கம்பிகளும் கான்கிரீட் சுவர்களும் குவியலாக மாறின. கட்டடம் இடிந்து விழுந்த வேளையில், அதன் அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த தகரக் கூரையிலான மாணவர் உணவகத்தின் மீதும் இடிபாடுகள் சரிந்து விழுந்தன. மருத்துவ மேல்படிப்பிற்கான நுழைவுத் தேர்வுக்குத் தயாராகி வரும் 30க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் அந்தச் சமயத்தில் அங்கு இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால், கட்டட இடிபாடுகளுக்குள் நூற்றுக்கும் மேற்பட்டோர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இடிபாடுகளுக்குள் இருந்து உதவி கேட்டு அலறும் சத்தங்கள் கேட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து குறித்துத் தகவல் அறிந்ததும் டெல்லி தீயணைப்புத் துறையினர், தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் டெல்லி காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். விளக்கு வாகனங்களின் உதவியோடு, இரவிலும் மீட்புப் பணிகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டன. கான்கிரீட் சுவர்களைத் துளையிடும் நவீன எந்திரங்கள், இரும்பு கம்பிகளை வெட்டும் கருவிகள் மற்றும் இடிபாடுகளுக்குள் மனிதர்கள் இருப்பதை அறியும் அதிநவீன கேமராக்கள் ஆகியவை மீட்புப் பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களைக் கண்டறிய மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டுள்ளன. இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக எய்ம்ஸ் உள்ளிட்ட மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மருத்துவமனைகளில் தங்களின் பிள்ளைகளைத் தேடி அலைவது நெஞ்சை உருக்குவதாக உள்ளது.

இந்த விபத்து குறித்து தெற்கு டெல்லி காவல் துறை துணை ஆணையர் ஆனந்த் மிட்டல் கூறுகையில், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், விபத்து நடந்த கட்டடத்தின் உரிமையாளர் யார், கட்டுமானப் பணிகளுக்கு முறையான அனுமதி பெறப்பட்டதா என்பது குறித்தும், விபத்திற்கான காரணங்கள் குறித்தும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு தீவிர விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

### மேற்கு வங்கத்தில் பரபரப்பு:

# திரிணாமூல் எம்.பி. மீது தாக்குதலுக்கு மம்தா பானர்ஜி கடும் கண்டனம்

கொல்கத்தாஜூன் 1:

மேற்கு வங்க மாநிலம் சோனார்பூர் பகுதிக்குச் சென்ற திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபிஷேக் பானர்ஜி மீது ஒரு கும்பல் திடீரென முட்டைகளை வீசியும், கற்களால் அடித்தும் பயங்கரத் தாக்குதல் நடத்தியுள்ளது.



இந்தச்சம்பவத்தில் அவரது சட்டை கிழிக்கப்பட்டதுடன், கண்ணாடி மற்றும் கடிகாரமும் சேதமடைந்தன.

அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு, வன்முறையால் பாதிக்கப்பட்ட தங்களது கட்சித் தொண்டர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக அபிஷேக்பானர்ஜி சோனார்பூர் சென்றிருந்தார். அப்போது அங்கு திரண்ட பாஜ ஆதரவாளர்கள், அவருக்கு எதிராகக் கருப்புக் கொடிகளைக் காட்டி, திருடன் என முழக்கமிட்டுத் தாக்குதலில் ஈடுபட்டனர். அங்கிருந்த நபர் ஒருவர் உரிய நேரத்தில் அவருக்குத் தலைக்கவசம் அணிவித்ததால், அவர் நல்வாய்ப்பாக உயிர் தப்பினார். அவருக்கு எதிராகக் கருப்புக் கொடிகளைக் காட்டி, திருடன் என முழக்கமிட்டுத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

எனினும், அவரது மார்பு, முதுகு மற்றும் கழுத்துப் பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்துப் பேசிய முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி, இந்தத் திட்டமிட்ட கொலைவெறித் தாக்குதலுக்குப் பின்னால் பாஜ உள்ளது என்றும், காயமடைந்த அபிஷேக் பானர்ஜிக்கு உரிய சிகிச்சை அளிக்கக் கூடாது என மருத்துவமனைகளுக்குப் புதிய ஆளும்கட்சியினர் அழுத்தம் கொடுப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியல் கருத்து வேறுபாடுகளை வன்முறையால் எதிர்கொள்வது ஜனநாயகம் அல்ல என்று அவர் சாடியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அம்மாநில அரசியல் களம் பெரும் பதற்றமடைந்துள்ளது.

### சூரிய மின்சக்தி திட்டத்தில்

# 40 லட்சம் குடும்பங்கள் பலன்

## மத்திய அரசு தகவல்

புதுடெல்லி,ஜூன்.1

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத சூரிய மின்சக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கவும் வீடுகளில் மின் கட்டண செலவை குறைக்கவும் 'பி.எம். சூர்ய கர் முப்த் பிஜிலி யோஜனா' எனப்படும் சூரிய வீடு இலவச மின் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2024 பிப்ரவரியில் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1 கோடி குடும்பங்களுக்கு சூரிய மின்சக்தி உற்பத்தி அமைப்பை நிறுவ மானியம் வழங்கப்படுகிறது. அரசின் இணையதளத்தின்படி, இத்திட்டம் 2027 மார்ச் 31ம் தேதி நிறைவடைகிறது. இதுவரை 68 லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 40 லட்சத்து 21,346 குடும்பங்கள் இத்திட்டத்தால் பலன் அடைந்துள்ளன. பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ் தொடங்கப்பட்ட இத்திட்டம், அரசின் சுயசார்பு இந்தியா மற்றும் வளர்ந்த இந்தியா 2047 ஆகியவற்றின் முக்கிய தூணாக முன்னிறுத்தப்படுகிறது.



ராஜஸ்தான் மாநிலம் சூர்யு பகுதியில் அச்சுறுத்தம் வகையில் மாபெரும் புழுதி திரண்டு வருவதை பார்த்து மிரண்டு நின்றவர்களை படத்தில் காணலாம்.

### ஐபிஎல் இறுதிப்போட்டி:

# 2 ஆவது முறையாக சாம்பியன் வெல்லப்போவது யார்?

## பெங்களூர்–குஜராத் அணிகள் பலப்பரீட்சை

அகமதாபாத், ஜூன்.1–

ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நடப்பு ஆண்டின் இந்தியன் பிரீமியர் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. உலகின் மிகப் பெரிய மைதானமான அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்டத்தில், இரண்டாவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் நேருக்கு நேர் மோதுகின்றன.

நடப்புத் தொடரின் லீக் சுற்றுகளில் இரு அணிகளுமே தலா 14 ஆட்டங்களில் விளையாடி 9 வெற்றிகள், 5 தோல்விகளுடன் தலா 18 புள்ளிகளைப் பெற்றிருந்தன. எனினும், ரன் விகித அடிப்படையில் பெங்களூர் அணி முதலிடத்தையும், குஜராத் அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தன. தொடர்ந்து நடைபெற்ற முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் பெங்களூரு அணி 92 ரன்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தி நேரடியாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. மறுபுறம், இரண்டாவது தகுதிச் சுற்றில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை வீழ்த்திய குஜராத் டைட்டன்ஸ் அணி, மூன்றாவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது.

கடந்த ஆண்டு சாம்பியன் பட்டம் வென்ற பெங்களூர் அணி, இந்த முறையும் பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் தீவிரத்தில் உள்ளது. அந்த அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி நடப்புத் தொடரில் 600 ரன்களுடன் அசத்தலான பார்மில் உள்ளார். கேப்டன் ரஜத் படிதார், தேவ்தத் படிக்கல் ஆகியோர் நடுவரிசைக்கு பலம் சேர்க்கின்றனர். பந்துவீச்சில் 28 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள புவனேஷ்வர் குமார், ரசிக் தார், கிருணால் பாண்டியா ஆகியோர் பெங்களூர் அணியின் தூண்களாகத் திகழ்கின்றனர்.

அதேநேரம், சொந்த மைதானத்தில் விளையாடும் குஜராத் டைட்டன்ஸ் அணியில் கேப்டன் சுப்மன் கில் 722 ரன்களுடனும், தமிழக வீரர் சாய் சுதர்சன் 710 ரன்களுடனும் ஆரஞ்சுத் தொப்பியைக் கைப்பற்றும் வேட்டையில் உள்ளனர். பந்துவீச்சில் ககிசோ ரபாடா 28 விக்கெட்டுகளுடன் அந்த அணிக்கு பெரும் பலமாக விளங்குகிறார். முகமது சிராஜ், ரஷீத் கான் ஆகியோரும் பெங்களூர் பேட்ஸ்மேன்களுக்கு நெருக்கடி கொடுக்கக் காத்திருக்கின்றனர்.

இந்த சீசனில் இவ்விரு அணிகளும் மோதிய மூன்று ஆட்டங்களில் பெங்களூர் இரண்டு முறையும், குஜராத் ஒரு முறையும் வென்றுள்ளதால் இன்றைய இறுதிப் போட்டியில் விறு விறுப்புக்குப் பஞ்சமிருக்காது.

### நீட், சி.பி.எஸ்.இ. உள்பட

# 4 தேர்வுகளின் குளறுபடியால் 1 கோடி மாணவர்கள் பாதிப்பு

## ராகுல்காந்தி பரபரப்பு குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஜூன்.1–

நீட், சி.பி.எஸ்.இ, எஸ்.எஸ்.சி, கியூட் ஆகிய 4 தேர்வுகளின் குளறுபடியால் ஒரு கோடி பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.

மருத்துவ இளநிலைப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு மே 3ம் தேதி நடைபெற்றது. வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததால் இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டு ஜூன் 21–ம் தேதி மறுதேர்வு நடத்தப்பட உள்ளது.

சிபிஎஸ்இ 12–ம்வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவியரின் விடைத்தாள் டிஜிட்டல் முறையில் திருத்தப்பட்டதில் சர்ச்சை எழுந்திருக்கிறது. உத்தர பிரதேசம், பீகாரில் அண்மையில் நடைபெற்ற கணினி வழியிலான எஸ்எஸ்சி தேர்வின்போது சர்வர் கோளாறால் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இந்த சூழலில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று நடைபெற்ற கணினி வழியிலான கியூட் நுழைவுத் தேர்வின்போது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது.

இதனால் சுமார் 2 மணி நேரம் காலதாமதம் ஏற்பட்டது.

இதுதொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:–

நீட், சிபிஎஸ்இ, எஸ்எஸ்சி, கியூட் ஆகிய 4 தேர்வுகளின் குளறுபடியால் சுமார் ஒரு கோடி மாணவ, மாணவியர் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஒரு தேர்வுகூட நேர்மையாக நடத்தப்படவில்லை.

பிரதமர் நரேந்திர மோடியை, 'உலக குரு' என்று அழைக்கிறார்கள். ஆனால் அவர் ஒட்டுமொத்த கல்வி முறையையும் சீர்குலைத்து உள்ளார். நீங்கள் (மோடி) ஒரு தலைமுறையின் எதிர்காலத்தை அழித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த தலைமுறை நீங்கள் செய்யும் தவறுக்கு பொறுப்பேற்க வைக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### உத்தரப் பிரதேசத்தில்

# தேசிய மாற்றுத்திறனாளி தடகள வீரர் சடலமாக மீட்பு

## துப்பாக்கியால் சுடப்பட்டாரா என விசாரணை

புதுடெல்லி, ஜூன் 1:

உத்தரப் பிரதேச மாநிலம் காசியாபாத்தில் உள்ள சாய் உபவன் பகுதியில், தேசிய அளவிலான மாற்றுத்திறனாளி தடகள வீரர் சிராக் தியாகி மர்மமான முறையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது மரணம் குறித்து காவல்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. டெல்லியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கிப் படித்து வந்த சிராக் தியாகி, நேற்று காலை அங்கிருந்து புறப்பட்டு முராத் நகரில் உள்ள தனது சொந்த கிராமத்திற்குச் சென்றுள்ளார். இந்த நிலையில், காசியாபாத் கோத்வாலி காவல் எல்லைக்குட்பட்ட சாய் உபவன் பகுதியில் அவர் சடலமாகக் கிடப்பதாகக் காவல்துறைக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மாலை ஏழு மணி அளவில் சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர், அவரது உடலைக் கைப்பற்றினர்.

மீட்கப்பட்ட தடகள வீரரின் முதுகில் ஆழமான காயம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் துளை போன்ற காயம் துப்பாக்கிக் குண்டால் ஏற்பட்டதா அல்லது ஏதேனும் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டதால் ஏற்பட்டதா என்பது குறித்துப் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

இது குறித்துப் பேசிய கோத்வாலிகாவல்நிலைய ஆய்வாளர் சச்சின் குமார், தடகள வீரரின் மரணத்திற்கான உண்மையான காரணம் உடற்கூறாய்வு அறிக்கை வந்த பிறகே முழுமையாகத் தெரியவரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

### நீட் வினாத்தாள் கசிவு விவகாரம்

# மாபியாக்களின் பிடியில் நாட்டின் கல்வி முறை சிக்கியுள்ளது

## அரவிந்த் கெஜ்ரிவால் ஆவேசம்

புது தில்லி, ஜூன் 1:

மத்திய அரசு நடத்தும் நீட் நுழைவுத்தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பாக ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் மத்திய அரசை மிகக் கடுமையாகச் சாடியுள்ளார். நாட்டின் கல்வி முறை ஒட்டுமொத்தமாக மாஃபியாக்களின் பிடியில் சிக்கியுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். மத்திய அரசின் செயல்பாடுகளைக் கண்டித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வினாத்தாள் கசியாமல் தடுப்பதற்காகப் விமானப் படை பயன்படுத்தப்படும் என்று மத்திய அரசு கூறுவது வேடிக்கையாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் வினாத்தாள் கசிவை தடுத்து நிறுத்த முடியுமா என்றும், நமது அரசு ஏன் படிப்பறிவற்றவர்களைப் போலப் பேசுகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். உலகம் முழுவதும் எத்தனையோ தேர்வுகள் நடத்தப்படும் நிலையில், இது போன்ற விசித்திரமான நடவடிக்கைகளை நாம் எங்கும் கேள்விப்பட்டதே இல்லை என்றும் அவர் விமர்சித்துள்ளார். வினாத்தாள் கசிவைத் தடுப்பதில் மத்திய அரசுக்கு முறையான எண்ணமோ அல்லது விருப்பமோ இல்லை என்பதை இந்த நடவடிக்கைகள் காட்டுவதாகத் தெரிவித்த முன்னாள் தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், இந்த நாட்டின் கல்வி முறை முற்றிலும் மாஃபியாக்களின் கைகளில் சிக்கித் தவிப்பதாகக் கவலை தெரிவித்துள்ளார். இந்த அவல நிலையைச் சரிசெய்ய வேண்டுமானால், அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும், ஒருவரால் மட்டுமே இந்த மாற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியாது என்றும் தனது காணொளிச் செய்தியில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இந்த நாட்டுக்குத் தகுதியான, படித்த பிரதமர் ஒருவர் தேவை என்றும் அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அணு ஆயுத மையங்களுக்கு அருகில் பிரமாண்ட ஏவுதளங்களை கட்டிய சீனா

## செயற்கைகோள் புகைப்படங்கள் மூலம் அம்பலம்



பீஜிங்,ஜூன்.1–

சீன ராணுவத்தின் மிக நீண்ட தூர அணு ஏவுகணைகளை பாதுகாக்கும் வகையில் பாலை வனத்தில் பிரம்மாண்ட ஏவுதளங்கள் மற்றும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருவதை செயற்கைக்கோள் படங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. சீன ராணுவம் கடந்த ஆறு ஆண்டுகளில் கிழக்கு சின்ஜியாங் பகுதியில் 2 எண்கோண வடிவ ராணுவ அமைப்புகளை உருவாக்கியது. கடந்த செப்டம்பர் மாதம் பீஜிங்கில் நடைபெற்ற இரண்டாம் உலகப் போர் நிறைவடைந்ததன் 80ம் ஆண்டு விழாவில், கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணைகளை சீனா காட்சிப்படுத்தியிருந்தது. சின்ஜியாங் மற்றும் கன்சுமா காணங்களில் உள்ள பாலைவனப் பகுதிகள் சீனாவின் அணுசக்திப் படைகளின் முக்கிய தளங்களாக நீண்டகாலமாக இருந்து வருகின்றன.

அமெரிக்காவின் ஏவுகணை தாக்குதல்களை முன்கூட்டியே கண்டறியும் 'ேஹ ாயன்-1' செயற்கைக்கோள் எச்சரிக்கை அமைப்புகளையும் சீனா முன்பே மேம்படுத்தியிருந்தது. இந்நிலையில், சீனாவின் மிக நீண்ட தூர அணு ஏவுகணைகள் வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு அருகே அதி நவீன ஏவுதளங்கள், பதுங்கு குழிகள் மற்றும் தகவல் தொடர்பு மையங்களை சீனா மிக ரகசியமாக உருவாக்கி வருவதை புதிய செயற்கைக்கோள் படங்கள் தற்போது வெளிப்படுத்தியுள்ளன. ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் ஆய்வு செய்த இந்த செயற்கைக்கோள் படங்களில், நடமாடும் ஏவுகணை ஏவுதளங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளுக்காக 80க்கும் மேற்பட்ட புதிய ஏவுதளங்கள் பாலைவனத்தில் அதிவேகமாக உருவாக்கப்பட்டு வருவது தெரியவந்துள்ளது.

குறிப்பாக, கடந்த 11ம் தேதியிட்ட செயற்கைக்கோள் படங்கள், சின்ஜியாங் எண்கோண வடிவ ராணுவ தளத்தின் எல்லையில் ராணுவ செயல்பாடுகள் தீவிரமாக நடப்பதை உறுதிப்படுத்தியுள்ளன. இந்த பிரம்மாண்ட கட்டுமானங்கள் குறித்து ஹவாய் பசிபிக் போரம் ஆராய்ச்சி மையத்தின் இணை ஆய்வாளர் அலெக்சாண்டர் நீல் கூறுகையில், 'ஆயிரக்கணக்கான சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான பாலைவனப் பகுதியில் புதிய ராணுவ கட்டமைப்புகள் பிரம்மாண்டமான முறையில் மேற்கொள்ளப்படுகிறது. சீனாவின் அணு ஆயுதப் பலத்தை பன்மடங்கு அதிகரிக்கவும், அதனை பல்வகைப்படுத்தவும் இந்த பணிகள் நடக்கின்றன' என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டமைப்பின் அணுசக்தி தகவல் திட்ட இயக்குனர் ஹான்ஸ் கிறிஸ்டென்சன் கூறுகையில், 'இது போன்ற பிரமாண்ட கட்டுமானத்தை இதற்கு முன்பு பார்த்ததே இல்லை. இது மிகவும் வியத்தகு முயற்சியாகும்' என்று குறிப்பிட்டுள்ளார். சீனாவின் அணு ஆயுதப் பெருக்கம் குறித்து அதிபர் ஷி ஜின்பிங், அமெரிக்க அதிபர் டிரம்ப் அவர்களுக்கு தைவான் விவகாரத்தில் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்துள்ளார். அணுசக்தி கொள்கையில் 'முதலில் பயன்படுத்த மாட்டோம்' என்ற வியூகத்தை சீனா கொண்டிருந்தாலும், தைவான் விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டால் அணு ஆயுத அச்சுறுத்தலை சீனா பயன்படுத்தக்கூடும் என்று சர்வதேச தூதர்கள் எச்சரிக்கின்றனர்.

அமெரிக்காவின் பென்டகன் பாதுகாப்புத்துறை வெளியிட்ட அறிக்கையின்படி, வரும் 2030ம் ஆண்டுக்குள் 1000 அணு ஆயுதங்களை தயார் நிலையில் வைக்க சீனா இலக்கு நிர்ணயித்துள்ளது. கார்னகி சர்வதேச அமைதிக்கான நிறுவனத்தின் மூத்த அணுசக்தி கொள்கை ஆய்வாளர் டோங் ஜாவோ கூறுகையில், 'இந்த எண்கோண வடிவ அமைப்புகளும் கோபுரங்களும் ஹமி ஏவுகணை தளத்தில் சீனாவின் அணுசக்தி செயல்பாடுகளின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டுடன் தொடர்புடையதாக இருக்கலாம்' என்று தெரிவித்துள்ளார்.

அணு ஆயுத மையங்களுக்கு அருகில் பாலைவனப் பகுதியில் ஏவுதளங்களுடன் பிரமாண்டமான ராணுவ கட்டமைப்பை சீனா உருவாக்கியிருப்பது செயற்கைகோள் புகைப்படங்கள் மூலம் அம்பலமாகியிருக்கிறது.

உலகின் தற்போதைய சூழலில், அணு ஆயுத போர் வெடிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பது நிதர்சனமாகி உள்ளது. அத்தகைய சவாலை எதிர்கொள்ள எதிர்கால போர்களுக்கு ஏற்ற வகையில் இப்போதே தங்கள் ராணுவ கட்டமைப்புகளை வல்லரசு நாடுகள் வலுப்படுத்தி வருகின்றன.

அந்த வகையில், சீனாவில் பிரமாண்டமான ராணுவ தளம் கட்டப்பட்டு வரும் தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளது. அமெரிக்காவில் உள்ள எந்த இடத்தையும் தாக்கக்கூடிய அணு ஏவுகணைகளை சீனா ஏற்கனவே தயாரித்துள்ளது. அத்தகைய தொலைதூர பகுதிகளுக்கு செல்லக் கூடிய ஏவுகணைகளை வைத்திருக்கும் மையங்களுக்கு அருகில் சீனா ஏவுதளங்கள், பதுங்குகுழிகள், தகவல் தொடர்பு வசதிகள் கொண்ட பிரமாண்டமான ராணுவ கட்டமைப்பை உருவாக்கி இருக்கும் செயற்கைகோள் புகைப்படங்களை ராய்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

கிழக்கு சின்ஜியாங் மாகாணத்தில் உய்குர் தன்னாட்சி பகுதியில் கடந்த 6 ஆண்டுகளாக உருவாக்கப்பட்டு வரும் இந்த ராணுவ கட்டமைப்பில் 2 எண்கோண வடிவ வளாகங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த 2 தளங்களும் ஹமி அணு ஏவுகணை மையத்தின் தென்மேற்கில் இருந்து சுமார் 200 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. சீனாவின் முதன்மையான அணு ஆயுத சோதனைப் பகுதியான லோப் நூருக்கு அருகே 3வது தளம் கட்டுமானத்திற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது கட்டப்பட்டுள்ள 2 எண்கோண வளாகங்களில் ஏவுதளங்கள், பதுங்கு குழிகள், தகவல் தொடர்பு வசதிகள், ஆயுத கிடங்குகள், விமான நிலையங்கள், ஹமி அணு ஆயுத மையத்துடன் இணைக்கும் ரயில் முனையங்கள், பெரிய ராணுவ வாகனங்கள் நிறுத்துமிடங்கள், வீரர்கள் தங்குமிடங்கள் கட்டப்பட்டுள்ளதை செயற்கைகோள் புகைப்படங்கள் காட்டுகின்றன.

குறிப்பாக, ஒவ்வொரு எண்கோண வளாகமும், சுற்றியுள்ள பாலைவனத்திற்குள் ஆழமாக நீண்டு செல்லும் மண் பாதைகள் மற்றும் குழாய்களின் ஒரு விரிவான வலையமைப்பின் மையமாக உள்ளன. இந்தப் பாதைகள், பாறை நிறைந்த நிலப்பரப்பு மற்றும் வறண்ட ஓடைப் படுகைகளுக்கு இடையில் அமைந்துள்ள கான்கிரீட் தளங்களுடன் இணைகின்றன.

இந்தத் தளங்கள், நகரும் வான் பாதுகாப்பு அமைப்புகள், மின்னணுப் போர் உபகரணங்கள் அல்லது சில பெரிய தளங்களைப் பொறுத்தவரை, சாலை வழியே நகர்த்தக்கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணை ஏவுதளங்களுக்காக பயன்படுத்தப்படலாம் என்று பாதுகாப்பு வல்லுநர்கள் தெரிவித்தனர். வடக்கில் உள்ள எண்கோண வளாகத்தில், விண்வெளி அல்லது நுண்ணலைத் தொடர்பு வசதியாக இருக்கக் கூடிய கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அங்குள்ள செயற்கைக்கோள் தட்டுகள் மற்றும் 2 பெரிய கோபுரங்களை அவர்கள் சுட்டிக்காட்டினர். சீனாவின் அணு ஆயுதங்களுக்கு எதிராக அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதை முறியடிக்கும் தற்கான முழு அம்சங்களும் கொண்டதாக இந்த ராணுவ தளங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்த மாட்டோம் என்ற கொள்கையை சீனா கொண்டிருப்பதாக அடிக்கடி கூறி வருகிறது.

அதே சமயம் தைவான் விவகாரத்தில் சீனா எப்போதும் விடாப்பிடியாக இருந்து வருகிறது. சமீபத்தில் அமெரிக்க அதிபர் டிரம்ப் பீஜிங் சென்ற போது கூட, தைவான் விவகாரத்தை தவறாக கையாண்டால் அது சீனா-அமெரிக்கா இடையே போருக்கு கூட வழிவகுக்கும் என சீன அதிபர் ஜின்பிங் எச்சரித்தது குறிப்பிடத்தக்கது.

★ அமெரிக்கா கவலை

சீனாவின் ராணுவ கட்டமைப்பு குறித்து அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்சேத் கூறுகையில், ''சீனாவின் வளர்ந்து வரும் ராணுவ பலத்தை எதிர்கொள்ள ஆசிய கூட்டாளிகள் பாதுகாப்பு செலவுகளை அதிகரிக்க வேண்டும். மேலும், சீனாவின் ராணுவ குவிப்பு மற்றும் பிராந்தியத்திற்கு அப்பாலும் அதன் ராணுவ நடவடிக்கைகளின் விரிவாக்கம் நியாயமான கவலையாக உள்ளது'' என்றார்.

★ ஆச்சரியப்படும் ஆய்வாளர்கள்

சீனாவின் வடமேற்குப் பாலைவனத்தில் உருவாகி வரும் பிரமாண்டமான ராணுவ தளத்தின் பரப்பளவு, அனுபவம் வாய்ந்த ஆய்வாளர்களையே ஆச்சரியப்படுத்தியுள்ளது. ''நான் இது போன்ற ஒன்றை இதற்கு முன் பார்த்ததில்லை. இது ஒரு அசாதாரண முயற்சி'' என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டமைப்பின் அணுசக்தி தகவல் திட்டத்தின் இயக்குனர் ஹான்ஸ் கிறிஸ்டென்சன் கூறினார்.

# தெற்கு ஆசியாவில் சக்தி வாய்ந்த நாடு இந்தியா

## அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் கருத்து




சிங்கப்பூர்,ஜூன்.1–

தெற்கு ஆசியாவில் சக்தி வாய்ந்த நாடாக இந்தியா திகழ்வதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் கூறியுள்ளார்.

இந்தியா கடந்தாண்டு மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இந்தியாவின் பலத்தை உலக நாடுகள் அறிந்தன. இந்நிலையில் ஆசிய-பசிபிக் பாதுகாப்பு உச்சிமாநாடு, சிங்கப்பூரில் உள்ள ஷாங்கிரி-லா ஓட்டலில் நேற்று நடைபெற்றது. இதில் 44 ஆசிய-பசிபிக் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள், ராணுவத் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்று நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு குறித்து ஆலோசித்து வருகின்றனர். இதில் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் பேசியதாவது:

தெற்கு ஆசியாவில் இந்தியா சக்தி வாய்ந்த நாடு. அது, தனது ராணுவத்தை நவீனமயமாக்கி வருகிறது. இந்தியாவின் வளர்ந்து வரும் ராணுவத் திறன்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே சமநிலையைப் பேணுவதில் அதன் உத்திகள் பாராட்டுக்குரியது. இந்தோ-பசிபிக் பாதுகாப்பு அமைப்பில், இந்தியாவின் பங்கு முக்கியமானது.

தெற்காசியாவில், எல்லையைப் பாதுகாப்பதில் இந்தியா ஒரு முக்கியமான நாடாக உள்ளது. பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதற்காக இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. உயர்தர ராணுவ நடவடிக்கைகளைத் தக்கவைக்க, பலமான தொழில்முறை மற்றும் தளவாடத் திறனை இந்தியா உருவாக்கி வருகிறது.

அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு விரிவடைந்து வருகிறது. இரு நாடுகளும் ராணுவத் தயார் நிலை மற்றும் திறன் மேம்பாட்டை அதிகரிக்க கூட்டு தயாரிப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஜாவெலின் என்ற டேங் எதிர்ப்பு ஏவுகணையை மேம்படுத்த இந்தியாவுடன் கூட்டு தயாரிப்பைத் தொடர நாங்கள் உறுதியளித்துள்ளோம். ராணுவ தளவாட உற்பத்தி மற்றும் ராணுவ செலவுகளை அதிகரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

உலகின் மிகச்சிறந்த ஆயுதங்களை அதிக அளவில், அதிவேகத்தில் மற்றும் நியாயமான விலையில் நாங்கள் தயாரிப்போம். அதிபர் ட்ரம்ப், கடந்த ஆண்டு பாதுகாப்புக்காக 1 டிரில்லியன் டாலர் செலவிட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

# அதிபர் டிரம்ப் சிறந்த உடல்நலத்துடன் இருக்கிறார்

## அதிபரின் மருத்துவர் அறிக்கை



வாஷிங்டன்,ஜூன்.1–

அதிபர் டிரம்ப் சிறந்த உடல்நலத்துடன் இருப்பதாகவும், பதவி வகிப்பதற்கான முழு தகுதியுடன் இருப்பதாகவும் அவரது மருத்துவர் தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்கு கடந்த செவ்வாயன்று முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 22 நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்ட சிடி ஸ்கேன் மற்றும் பிற இதயம் தொடர்பான பரிசோதனைகள், புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் பிற தடுப்பு மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

சுமார் 3மணி நேரம் மருத்துவர்கள் அவருக்கு பரிசோதனை மேற்கொண்டனர். இந்த பரிசோதனை குறித்த அறிக்கையை மருத்துவர் சீன் பார்பபெல்லா நேற்று முன்தினம் வெளியிட்டார். இந்த அறிக்கையின்படி, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்(79) எடை 108கிலோ இருந்தது. இது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த மருத்துவ பரிசோதனையை விட அதிபர் டிரம்ப் 6 கிலோ எடை கூடியுள்ளார்.

உணவு முறை, உடற்பயிற்சி மற்றும் எடை குறைப்பு குறித்து மருத்துவர்கள் அவருக்கு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளனர். ஆனால் அவரது அறிவாற்றல் மற்றும் உடல் செயல் திறன் மிகச் சிறப்பாக உள்ளது. இந்த அறிக்கையில் அதிபர் டிரம்பின் கைகளில் காயமேற்பட்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அடிக்கடி கை குலுக்குவதால் ஏற்படும் சிறிய மென்மையான திசு எரிச்சல் என்று விளக்கப்பட்டுள்ளது.

இது ஆஸ்பிரின் சிகிச்சையின் பொதுவான மற்றும் தீங்கற்ற விளைவாகும். குறைந்த அளவு ஆஸ்பிரினுக்கு மாறுவது பரிந்துரைகளில் ஒன்றாகும்.

அதிபரின் உடல்நிலையில் அசாதாரணமாக எதுவும் இல்லை என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிபர் வலுவான இதயம், நுரையீரல், நரம்பியல் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் கொண்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானில்

# அகதிகளை ஏற்றிச் சென்ற லாரி கவிழ்ந்ததில் 10 குழந்தைகள் உள்பட 22 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தான்,ஜூன்.1–

ஆப்கானிஸ்தானில் அகதிகளை ஏற்றிச் சென்ற லாரி கவிழ்ந்ததில் 10 குழந்தைகள் உள்பட 22 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 35 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஓட்டுநர் தூங்கியதால் கட்டுப்பாட்டை இழந்து லாரி கவிழ்ந்தது. விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். கிழக்கு ஆப்கானிஸ்தானின் லக்மான் மாகாணத்தில், சமீபத்தில் நாடு திரும்பிய ஆப்கானிய அகதிகளை ஏற்றிச் சென்ற லாரி கவிழ்ந்ததில் குறைந்தது 22 பேர் உயிரிழந்தனர் மற்றும் 36 பேர் காயமடைந்தனர். இதில் காயமடைந்த 36 பேர் மீட்கப்பட்டு, மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் கடந்த 2023 முதல் சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்டு வரும் கடுமையான நடவடிக்கைகளால், அங்கிருந்து ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு தாயகம் திரும்பி வருகின்றனர். அவ்வாறு திரும்பிய அகதிகளே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர். மற்றொரு சம்பவமாக வெள்ளிக்கிழமை இரவு நூரிஸ்தான் மாகாணத்தில் கார் ஒன்று ஆற்றில் கவிழ்ந்த விபத்தில் 4 பேர் மாயமாகியுள்ளனர்; அவர்களை மீட்புக் குழுவினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.ss

## எபோலா வைரஸ்

# பரவி வரும் காங்கோவில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் ஆய்வு



புனியா,ஜூன்.1–

காங்கோ நாட்டில் எபோலா வைரஸ் பரவல் அதிகரித்து உள்ளது. தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும் எபோலா வைரஸ் பரவல் வேகமாக பரவி வருகின்றது. இந்நிலையில் உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குனர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் காங்கோ நாட்டுக்கு வருகை புரிந்துள்ளார். காங்கோ பிரதமர் ஜூடித் சுமின் வாதுலுகாவை சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டெட்ரோஸ், ''நோயின் மையப்பகுதியிலேயே அதனை எதிர்த்துப் போராடத் தேவையான அனைத்து ஆதரவையும் வழங்குவதும், தேவைப்படும் ஒவ்வொரு உதவியையும் தொடர்ந்து அளிப்பதுமே இதை சமாளிப்பதற்கான சிறந்த வழியாகும்.

906 பேருக்கு சந்தேகத்திற்கிடமான நோய்த் தொற்றுகளும், 223 சந்தேக மரணங்களும் பதிவாகி உள்ளது. இது ஒரு கடினமான சூழ்நிலை. காங்கோ இதற்கு முன்பும் பல முறை எபோலா வைரஸை எதிர்கொண்டுள்ளது. இந்த நோய்ப் பரவலை மீண்டும் ஒரு முறை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்'' என்றார். பின்னர் புனியா நகருக்கு சென்று அங்குள்ள சிகிச்சை மையத்தை பார்வையிட்டார்.

# இந்தியாவுடன் தற்காலிக வர்த்தக ஏற்பாடு குறித்து பேச்சுவார்த்தை

## ரஷ்ய அமைச்சர் தகவல்




மாஸ்கோ,ஜூன்.1–

இந்தியாவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களை உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட மற்றும் தற்காலிக வர்த்தக ஏற்பாடு குறித்து பேசி வருவதாக ரஷ்யாவின் பொருளாதார மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாக்சிம் ரெஷெட்னிகோவ் தெரிவித்துள்ளார். இந்தியா மற்றும் யுரேஷிய பொருளாதார ஒன்றியம் ஆகியவை இடையிலான வர்த்தக தாராளமயமாக்கல் குறித்த பேச்சுவார்த்தைகள் வேகம் பெற்றுள்ளதாக கஜகஸ்தானில் நடந்த யுரேஷிய பொருளாதார கவுன்சில் கூட்டத்தில் பேசிய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார். தேசிய நிகழ்வுகள் இந்நிலையில் இது குறித்து ரஷ்யாவின் பொருளாதார மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாக்சிம் ரெஷெட்னிகோவ் கூறுகையில், ''தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில வகை பொருட்களை உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட மற்றும் தற்காலிகமான வர்த்தக ஏற்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகின்றது. இந்தியாவுடனான விஷயங்கள் சற்று அதிக சிக்கலானவை. சொல்லப்போனால் அந்நாட்டின் பொருளாதாரம் பெரியது. பரஸ்பர நலன்கள் மிகவும் சிக்கலானவை. வெளிப்படையாக கூறினால் இந்தியத் தரப்பின் கோரிக்கைகளும் மிகவும் லட்சியமானவையாகவே உள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

## சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.1,17,040க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,630 க்கு விற்பனை ண்யாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ 240 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,17,040 க்கு விற்பனையாகிறது. சென்னையில் வெள்ண்ளி விலை ஒரு கிராம் ரூ.15 குறைந்து ரூ.290 க்கு விற்ண்பனை செய்யப்படுகின்றண்து.

## பெட்ரோல் விலை ரூ.100.80, டீசல் விலை ரூ.92.39க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.100.80 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.92.39 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவின் விலை லிட்டருக்கு ரூ.90.50ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

## கல்லீரல் நோய்களை குணப்படுத்தும் பப்பாளி விதை



பப்பாளி பழத்தில் நிறைய மருத்துவ குணங்கள் இருப்பது யாவரும் அறிந்ததே. தற்சமயம் அதிகமாக கிடைப்பதால் மக்கள் வாங்கி விரும்பி சாப்பிடுகிறார்கள். ஆனால், அதன் விதைகளை நீக்கிவிட்டுத் தான் சாப்பிடுவர். விதைகள் பப்பாளியை விட நிறைய மருத்துவ குணங்கள் கொண்டது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.கல்லீரலுக்கு தேவையான, ஆரோக்கியமான போஷாக்கை தரும் விதைகள். ‘லிவர் சிரோசிஸ்’ போன்ற கல்லீரல் நாய்களை குணப்படுத்தும்.

பப்பாளி விதைகள் ‘பெப்பைன்’ என்ற என்சைமைக் கொண்டுள்ளதால் ஜீரண சக்திக்கு உதவுகிறது. கல்லையும் ஜீரணிக்கக்கூடிய ஆற்றல் விதைகளுக்கு உண்டு. வாரம் மூன்று முறையாவது பப்பாளி விதைகளை பேஸ்ட் போல தயாரித்து எலுமிச்சை சாறில் கலந்து குடிக்கலாம். சிறுநீரக செயல் பாட்டினையும் நன்றாக தூண்டுவதால், உடலில் தீங்கை தரும் நச்சுக்களையும், கழிவுகளையும் எளிதில் வெளியேற்றும். வயிற்று பூச்சிகளை அழிக்க வல்லது.

பப்பாளி விதைகளை தொடர்ந்து சாப்பிடும் போது, உடலில் கொடிய மாற்றங்களை உருவாக்கும் கேன்சர் செல்களை உருவாக்காமல் தடுக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன.பல வகையான ஆர்த்ரைடிஸ், மூட்டுவலி ஆகியவற்றை உண்டாக்கும். வீக்கத்தை குறைத்து வலியைப் போக்கும்.இவ்வளவு நன்மைகளை தரும் பப்பாளி விதைகளை வாரம் ஒரு முறையாவது உணவுடன் எடுத்துக் கொண்டு நோய்களை விரட்டலாம்.பப்பாளி விதைகளை உணவில் சேர்ப்போம், நோய்களிலிருந்து மீள்வோம்.

## ரவா பால் கொழுக்கட்டை

தேவையானவை:




கடலை மாவு - ½ கப்,
ரவை - 300 கிராம்,
பால் - ஒரு லிட்டர்,
சர்க்கரை - ½ கிலோ,
முந்திரி - 50 கிராம்,
ஏலக்காய் - 5,
நெய் - 100 கிராம்,
உப்பு - ½ டீஸ்பூன்.

செய்முறை:

ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் நெய்விட்டு கடலை மாவை பச்சை வாசனை போகும் வரை வறுத்துக் கொண்டு கொஞ்சம் பால் விட்டுக் கரைத்து வைத்துக் கொள்ளவும். ஏலக்காயை பொடித்துக் கொள்ளவும். முந்திரியை நெய்யில் வறுத்துக் கொள்ளவும். ரவையுடன் ஒரு கால் ஸ்பூன் உப்பு, ஒரு கரண்டி சர்க்கரையும் சேர்த்து முறுக்கு மாவு போல் பிசைந்து ஊறவைக்கவும்.ஒரு லிட்டர் பாலில் ஒரு லிட்டர் தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விடவும். கொதிக்க ஆரம்பித்தவுடன், கரைத்து வைத்துள்ள கடலை மாவுக் கரைசலை ஊற்றி அடிபிடிக்காமல் கிளறி விடவும். கொதிக்கும் போது நெருப்பைக் குறைத்துக் கொண்டு பிசைந்து வைத்துள்ள ரவையை முறுக்குக் குழலில் தேன்குழல் அச்சைப் போட்டு ஒவ்வொரு ஈடாக கொதிக்கும் பாலில் பிழிந்து விடவும்.எல்லா முறுக்கு துண்டுகளும் வெந்து மேலே மிதந்து வந்த பிறகு ஏலக்காய் தூள், வறுத்த முந்திரி, சர்க்கரை போட்டு கொதிக்க விடவும். சர்க்கரை நன்கு கரைந்து கொதித்த பின்பு இறக்கி வைத்து ஒரு லிஸ்பூன் உப்பு, மீதமுள்ள நெய்யை சேர்த்து ஆறிய பின்பு பரிமாறவும். இந்த ரவா பால் கொழுக்கட்டை சாப்பிட புது விதமாகவும், சுவையாகவும் இருக்கும்.

# இதய அறுவைசிகிச்சைக்குப் பிறகு இரத்தக் கட்டிகளைத் தடுப்போம்



இதய அறுவைசிகிச்சை என்பது உயிரைக் காக்கவும், வாழ்வுத் தரத்தை மேம்படுத்தவும் உதவும் ஒரு முக்கியமான மருத்துவ நடைமுறையாகும். ஆனால், சிகிச்சைக்கு பின் இயல்பு நிலைக்கு மீண்டு வரும் காலத்தில், இரத்தக் கட்டிகள் (Blood Clots) உருவாகும் அபாயம் அதிகரிக்கிறது. இவ்வாறு கால்களில் உருவாகும் இரத்தக் கட்டிகளை ஆழக் குழாய் தடை (Deep Vein Thrombosis & DVT) என அழைக்கின்றனர். சில சமயங்களில் இக்கட்டிகள் கால்களில் உருவாகி, பின்நுரையீரலுக்கு சென்று ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நுரையீரல் நாளங்களில் அடைப்பை (Pulmonary Embolism & PE) ஏற்படுத்தலாம். இதனைத் தவிர்க்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். இதன் மூலம் அபாயங்களைத் தவிர்ப்பதோடு, மீண்டு வருவதற்கான மருத்துவ பராமரிப்பையும் குறைக்கமுடியும்.

இதுபோன்ற ரத்தக்கட்டிகள் விஷயத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவை என்னென்ன. சில முக்கிய குறிப்புகளை இனி பார்க்கலாம்.1. மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளைப் பின்பற்றுதல் மிக முக்கியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஒன்று மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை மட்டுமே எடுத்துக்கொள்வது. இதய அறுவைசிகிச்சைக்குப் பிறகு, குறிப்பாக கார்டியோபுல்மோனரி பைபாஸ் [cardiopulmonary bypass] சம்பந்தப்பட்ட அறுவைசிகிச்சைக்கு பின், பெரும்பாலும் இரத்தக் கட்டி உருவாவதைத் தடுக்கும் மருந்துகள் (Anticoagulants) அளிக்கப்படுகின்றன. இதய அறுவை சிகிச்சை அதிலும் உதாரணமாக, ஹெபரின் (Heparin) போன்ற மருந்துகள் இரத்தம் விரைவில் கட்டி ஆகாமல் தடுக்கும்.

இது ஊசி அல்லது ஐவி மூலம் செலுத்தப்படுகிறது,. இந்த சிகிச்சை நோயாளியின் உடல் நிலையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ரத்தத்தினால் உண்டாகும் கட்டிகளைத் தடுப்பதற்கும் அதிகப்படியான இரத்தப்போக்கைத் தவிர்ப்பதற்கும் இடையில் சமநிலையை பராமரிக்க உதவுகிறது. நோயாளி மருத்துவமனையில் டிஸ்சார்ஜ் ஆன பிறகும், அவருடைய உடல்நிலைக்குள்ள அபாயத்தின் அளவைப் பொறுத்து, ஆன்டிகோகுலண்ட் தொடரலாம்.

அறுவைசிகிச்சையில் இயந்திர இதய வால்வு பொருத்தப்பட்டாலோ அல்லது அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளிக்கு இதயத் துடிப்பில் குறைபாடு [ஏட்ரியல் ஃபைப்ரிலேஷன் - atrial fibrillation] இருந்தாலோ, மருத்துவர் நீண்டகால ஆன்டிகோகுலேஷன்சிகிச்சையைபரிந்துரைக்கலாம். இந்த மருந்துகள் பயனுள்ளதாக இருந்தாலும், ஆனால் உணவு மற்றும் பிற மருந்துகள் அவற்றின் நேர்மறையான விளைவை பாதிக்கக்கூடும் என்பதால் தொடர் கண்காணிப்பு மற்றும் வழக்கமான இரத்தப் பரிசோதனைகள் தேவை.

சில சந்தர்ப்பங்களில், ரிவரோக்சாபன் அல்லது அபிக்சாபன் [rivaroxaban / apixaban] போன்ற நேரடியாக வாய்வழி உட்கொள்ளும் புதிய ஆன்டிகோகுலண்டுகள் [direct oral anticoagulants] பரிந்துரைக்கப்படலாம். இவை உணவு அல்லது மருந்துகளின்மீது அதிக பாதிப்பை உருவாக்குவதில்லை. இதனால், நாம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய தேவையில்லை. இருப்பினும் இவற்றின் பயன்பாடானது அந்நோயாளியின் மருத்துவ நிலையைப் பொறுத்தே அமையும்.

2. அழுத்தக் கருவிகள் மற்றும் ஸ்டாக்கிங் பயன்படுத்துதல்

மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுடன், இயந்திர முறைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மருத்துவமனையில் இருக்கும்போது, நோயாளிகளுக்கு இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதற்காக உங்கள் கால்களை இடைவிடாது அழுத்திவிடும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். இதற்காக கால்களைச் சுற்றி அணியப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் காலுறைகளில் காற்றை ஊதி மீண்டும் அதை வெளியேற்றும் சாதனங்கள் மூலம் [intermittent pneumatic compression] ரத்த ஓட்டத்தை சீராக்கமுடியும்.

நோயாளிகள் பெரும்பாலும் கால்களை அழுத்திப்பிடிக்கும்காலுறைகளைஙஞ்ணி ட்ணணுஙுண்ண்டிணிண ண்ணுணிஙுடிடி ணஞ்ணி அணிவார்கள், இது கால்களில் நிலையான அழுத்தத்தை செலுத்துகிறது மற்றும் ரத்தம் ஒரே இடத்தில் சேர்வதையும் மற்றும் உறைதல் உருவாவதையும் தடுக்க உதவுகிறது. நோயாளியின் உடல் இயக்கம் இன்னும் குறைவாக இருக்கும்போது, குணமடைந்து மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குத் திரும்பிய ஆரம்ப நாட்களில் இந்த நடவடிக்கைகள்மிகவும் முக்கியம். குறிப்பாக படுக்கையிலேயே அதிக நேரம் இருக்கும் ஆரம்பகட்டத்தில் இவை மிகுந்த பயன் தருகின்றன.

3. இயன்றவரை சீக்கிரம் அசைவுகளைத் தொடங்குதல்

நம்முடைய உடல் இயக்கம் நம் இயல்பு நிலைக்கு மீண்டெழுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அதனால் நோயாளிகள் தங்கள் உடல் நிலை அனுமதிக்கும் அளவுக்கு விரைவாக எழுந்து நகர முயற்சி எடுக்க வேண்டும். முதலில் படுக்கையிலேயே கால் மூட்டுச் சுழற்சிகள் அல்லது பாதம் வளைத்தல் போன்ற எளிய பயிற்சிகளைச் செய்யலாம். பின்னர் உட்காருதல், நிற்பது, மற்றவர்கள் உதவியுடன் குறுகிய நடைப்பயிற்சி என படிப்படியாக முன்னேறலாம். இவை அனைத்தும் மருத்துவர் மற்றும் உடற்பயிற்சி நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இயக்கம், இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதோடு, தசைகளின் பலவீனத்தையும் குறைக்கிறது. அதேபோல் கட்டிகள் உருவாகும் வாய்ப்புகளையும், நுரையீரல் சிக்கல்களின் அபாயத்தையும் குறைக்கிறது.

4. வீடு திரும்பிய பின் கடைபிடிக்க வேண்டியவை

மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய பின்பும் சில முக்கிய அம்சங்களை பின்பற்ற வேண்டும்:

★ மருந்துகளை தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

★கால்களில் அழுத்தம் கொடுக்கும் கம்ப்ரஷன் ஸ்டாக்கிங்ஸ் அணிய வேண்டும்.

★கால்களில் சிவப்பு, வீக்கம், சூடு அல்லது தோல் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெறவேண்டும்.

★படுக்கையிலோ நாற்காலியிலோ இருந்தபடியே எளிய கால் பயிற்சிகளை (பாத சுழற்சி போன்றவை) தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

பாதப் பயிற்சிகளை பிசியோதெரபிஸ்ட்களின் கண்காணிப்பிலோ அல்லது அவர்களது அறிவுறுத்தல்களின் படியோ மேற்கொள்ள வேண்டும்.

5. ஆரோக்கியமான வாழ்க்கை முறை

நீண்ட காலத்திலும் இரத்தக் கட்டி அபாயத்தை குறைக்க, நாம் நம்முடைய வாழ்க்கை முறையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அதற்கு நாம் சில பழக்கவழக்கங்களைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். அவற்றில் முக்கியமானவை.

★உடல் எடையை சீராக வைத்துக்கொள்வது.

★புகைபிடித்தலை நிறுத்துவது.

★உடல் இயக்கத்தை வழக்கமாக்குவது.

இவையனைத்தும் உங்களுக்கு பாதிப்பிலிருந்து மீண்டெழுவதை மேலும் எளிதாக்கும்.

6.உடல் உணர்த்தும் எச்சரிக்கையைக் கவனித்தல்

மேற்கூறியவை அனைத்தும் ஒன்றிணைந்து இரத்தக் கட்டியின் அபாயத்திலிருந்து உங்களைப் பாதுகாக்கும். அதேநேரம் இரத்தக் கட்டி ஏற்படுவதற்கான அறிகுறிகள் பற்றி நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். இதுவே தக்க தருணத்தில் சரியான சிகிச்சைகளை மேற்கொள்ள உதவும். ரத்தக் கட்டி ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள்:

★கால்களில் வலி, வீக்கம் அல்லது சூடு உணர்தல்

★திடீர் மூச்சுத்திணறல்

★நெஞ்சு வலி

மேற்கூறிய அறிகுறிகளில் ஏதேனும் இருந்தால், நோயாளிகள் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும். ஆரம்பகாலத்திலேயே கண்டறிவதும், சிகிச்சை பெறுவதும் கடுமையான சிக்கல்களைத் தடுக்க உதவும்.இந்த பாதுகாப்பு முறைகள் மற்றும் வரமால் முன் கூட்டியே தடுக்கும் பழக்கங்களைப் பின் தொடர்வது, அறிகுறிகளை தொடர்ந்து கண்காணிப்பது, ஆரோக்கியமான வாழ்க்கை முறை தேர்வுகளை மேற்கொள்வது போன்ற அம்சங்கள் நம்முடைய உடல்நல பாதுகாப்பை வலுப்படுத்துவதால் சிகிச்சை மே குணமடைய உதவுகின்றன. நமக்கான மருத்துவ பராமரிப்புத் திட்டத்தை கவனமாகப் பின்பற்றுவதன் மூலம், நோயாளிகள் சீராகவும் பாதுகாப்பாகவும் மீண்டு வருவதற்கான வாய்ப்புகளை கணிசமாக மேம்படுத்த முடியும் என்பது ஒரு நல்ல செய்தி.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: இகா ஸ்வியாடெக் முன்னேற்றம்

அகமதாபாத்தில் ஐபிஎல் இறுதிப் போட்டி: சாம்பியன் பட்டத்தை தக்கவைக்குமா ஆர்சிபி?

அகமதாபாத்: ஐபிஎல் கிரிக்கெட் திருவிழாவின் இறுதிப் போட்டியில் இரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ஆர்சிபி, 2022-ம் ஆண்டு சாம்பியனான குஜராத் டைட்டன்ஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்துகிறது.

ரஜத் பட்டிதார் தலைமையிலான ஆர்சிபி அணி அதிரடி பாணியை பின்பற்றக்கூடியது. அதேவேளையில் ஷுப்மன் கில் தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் அணி நிதானமாக செயல்படும் திறன் கொண்டது. இரு அணிகளும் 2-வது முறையாக கோப்பையை வெல்லும் கனவுடன் களமிறங்குகின்றன.

லீக் சுற்றில் ஆர்சிபி அணி முதலிடம் பிடித்து அசத்தியிருந்தது. தொடர்ந்து தகுதி சுற்று 1-ல் குஜராத் டைட்டன்ஸ் அணியை 92 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றிருந்தது. மறுபுறம் முதல் வாய்ப்பை தவறவிட்ட குஜராத் அணி தகுதி சுற்று 2-ல் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதி போட்டியில் நுழைந்துள்ளது.



புள்ளி விவரப்படி நடப்பு சாம்பியனான ஆர்சிபி அணி, 2022-ம் ஆண்டு கோப்பையை வென்ற குஜராத் அணிக்கு எதிராக வெற்றி பெற அதிக வாய்ப்புள்ள அணியாகக் கருதப்படுகிறது. இதற்கு ஆர்சிபி அணி இந்தத் தொடரில் இதுவரை விளையாடி வரும் அதிரடி ஆட்டமுறையே முக்கியக் காரணமாகும்.

இந்த அதிரடி ஆட்டமுறை சில நேரங்களில் அவர்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்திய போதிலும், விராட் கோலி, தேவ்தத் படிக்கல், டிம் டேவிட், கேப்டன் ரஜத் படிதார், பில் சால்ட், வெங்கடேஷ் ஐயர் ஆகியோர் தங்களது அதிவேக பேட்டிங் மூலம் எதிரணிகளைத் தொடர்ந்து துவம்சம் செய்து வந்துள்ளனர்.

ஆடுகளங்களின் தன்மை, எதிரணிகளின் பந்துவீச்சு உத்திகள் எதுவுமே, இவர்களின் அதிரடித் தாக்குதல் ஆட்டமுறையை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. மேலும், நடப்பு ஐபிஎல் தொடரில் இவர்களைப் போல வேறு எந்த ஒரு அணியும் அதிக அளவில் 200 ரன்களுக்கு மேல் குவித்தது இல்லை.

கடந்த இரண்டு சீசன்களாக ஆர்சிபி ஒரு நிலையான அணியாக உருவெடுத்திருப்பதற்கு, கேப்டனாக ரஜத் படிதாரின் நிதானமான அணுகுமுறையும் ஒரு முக்கியக் காரணமாகும்.

முன்னாள் கேப்டன்களான விராட் கோலி அல்லது டு பிளெசிஸ் போன்று ரஜத் பட்டிதார் களத்தில் உணர்ச்சிகளை அதிகமாக வெளிப்படுத்தக்கூடியவர் கிடையாது. அதேவேளையில் 32 வயதான அவரிடம் தனித்துவமான நிதானமும் நம்பிக்கையும் உள்ளது. இது அணியில் உள்ள சர்வதேச சூப்பர் ஸ்டார் வீரர்கள் மற்றும் இளம் வீரர்கள் என இருதரப்பினரையும் பதற்றமின்றி, நிம்மதியாக வைத்திருக்க உதவுகிறது.

ஆர்சிபி அணி பவர்பிளே ஓவர்கள் முதலே எதிரணி பேட்டர்களை ரன் குவிக்க விடாமல் கட்டுப்படுத்தும் பந்துவீச்சுப் பட்டாளத்தையும் கொண்டுள்ளது. புவனேஷ்வர் குமார் தலைமையிலான இந்தப் பந்துவீச்சுப் படை, மிகச் சிறந்த ஃபார்மில் இருக்கும் குஜராத் அணியின் டாப்-ஆர்டர் பேட்டர்களுக்கு எதிராக தங்களது உயர்மட்ட செயல்திறனை வெளிப்படுத்த வேண்டியிருக்கும்.

பேட்டர்கள் அனைவரும் பவர்பிளே ஓவர்களைச் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி ஓவருக்கு 11 அல்லது 12 ரன்களுக்கு மேல் குவித்து வந்த இந்தத் தொடரில், குஜராத் டைட்டன்ஸ் அணியின் தொடக்க வீரர்களான கேப்டன் ஷுப்மன் கில், சாய் சுதர்சன் ஜோடியோ தங்களது ரன் வேட்டையை ஓவருக்கு 9 ரன்களுக்கு சற்று மேலாக மட்டுமே சேர்த்து வந்துள்ளனர். பவர்பிளே ஓவர்களில் நிதானமான மற்றும் படிப்படியான ரன் குவிப்பு என்ற பழமையான ஆட்ட அணுகுமுறையை குஜராத் அணி கையாண்டு வருகிறது. இதற்கு காரணம் என்னவென்றால், குஜராத் அணியின் மிடில்-ஆர்டர் பேட்டிங் சற்று பலவீனமாக இருப்பதே ஆகும். இதனால், முதல் மூன்று வரிசை வீரர்களான ஷுப்மன் கில், சாய் சுதர்சன், ஜாஸ் பட்லர் ஆகியோரே அணியின் ஒட்டுமொத்தப் பொறுப்பையும் ஏற்று ரன் குவிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இந்த வகையில், நடப்பு தொடரில் ஷுப்மன் கில் 163 ஸ்டிரைக் ரேட்டுடன் 722 ரன்கள் குவித்துள்ளார். இதில் ஒரு சதம், 6 அரை சதங்கள் அடங்கும். சாய் சுதர்சன் 159 ஸ்டிரைக் ரேட்டுடன் 710 ரன்களும் (ஒரு சதம், 8 அரை சதம்), ஜாஸ் பட்லர் 157 ஸ்டிரைக் ரேட்டுடன் 507 ரன்களும் (4 அரை சதங்கள்) குவித்துள்ளனர். இவர்களிடம் இருந்து மேலும் ஒரு சிறந்த செயல்திறன் வெளிப்படக்கூடும்.

நடப்பு சீசனில் குஜராத் டைட்டன்ஸ் அணி தங்களது சொந்த மைதானத்தில் 7 ஆட்டங்களில் விளையாடி 5 வெற்றிகளை பதிவு செய்துள்ளது. இது அந்த அணிக்கு கூடுதல் நம்பிக்கையை கொடுக்கக்கூடும். எனினும் அது அவ்வளவு எளிதாகவும் இருக்காது. ஏனெனில் ஆர்சிபி அணியில் நடப்பு சீசனில் 26 விக்கெட்களை வீழ்த்தியுள்ள புவனேஷ்வர் குமார் தனது அனுபவத்தால் பவர்பிளேவில் விக்கெட்களை வீழ்த்தி அசத்தி வருகிறார்.

அவருக்கு ஜோஷ் ஹேசில்வுட் (13 விக்கெட்டுகள்), ரசிக் சலாம் (16 விக்கெட்டுகள்), கிருணல் பாண்டியா (13 விக்கெட்டுகள்) ஆகியோர் உறுதுணையாக இருந்து வருகின்றனர். இவர்கள் ஒருங்கிணைந்து பன்முகத்தன்மை கொண்ட பந்துவீச்சுப் படையை உருவாக்கியுள்ளனர். இதில் கிருணல் பாண்டியா பேட்டிங்கிலும் பயனுள்ள வகையில் பங்களிப்பை வழங்கி வருகிறார்.

ஆர்சிபி அணியின் பேட்டிங் வரிசையின் ஆழம் மற்றும் மைதானத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பந்துகளைச் சிதறடிக்கும் அதிரடி ஆட்டக்காரர்கள் தொடக்கம் முதல் இறுதி வரை நிறைந்திருப்பது, அவர்களுக்கு சாதகமாக உள்ளது. ஆனால், அகமதாபாத் ஆடுகளம் பந்துவீச்சுக்குச் சாதகமாக அமைந்தால் ஆர்சிபி அணியின் அதிரடி பேட்டர்களைக் கட்டுப்படுத்துவதற்கான திறமையான பந்துவீச்சாளர்கள் குஜராத் அணியில் உள்ளனர்.

நடப்பு சீசனில் அதிக விக்கெட்கள் வீழ்த்தி உள்ளவர்களின் பட்டியலில் 28 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் இருக்கும் காகிசோ ரபாடாவுக்கு, முகமது சிராஜ், ரஷித் கான், ஜேசன் ஹோல்டர், பிரசித் கிருஷ்ணா ஆகியோர் பக்கபலமாக இருந்து வருகின்றனர். ரபாடாவும் சிராஜும் இந்த சீசனில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பந்துவீச்சு திறனை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவர்கள் முறையே 165 மற்றும் 162 டாட் பால்களை வீசி அதிக டாட் பால்கள் வீசிய பந்து வீச்சாளர்களின் பட்டியலில் டாப்பில் உள்ளனர். பேட்டிங்கிற்கு சாதகமான தட்டையான ஆடுகளங்களில் கூட பேட்டர்களை இவர்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தி உள்ளனர்.

இந்த ஜோடி ஹார்ட் லென்த் (பேட்டர்களுக்கு சற்று எட்டாதவாறு ஆடுகளத்தில் பந்தை வேகமாக குத்தி எறிவது) உத்தியை மிகத் துல்லியமாகப் பயன்படுத்திப் பலன் கண்டுள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தில் ஆர்சிபி அணியின் பேட்டிங் வரிசைக்கு இவர்கள் அழுத்தம் கொடுக்க முயற்சிக்கக்கூடும்.

ஐபிஎல் தொடரில் நடப்பு சாம்பியனாக இருந்து பட்டத்தை தக்க வைத்துக் கொண்ட பெருமையை சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகிய இரு அணிகள் மட்டுமே தன்வசம் வைத்துள்ளன. இன்றைய இறுதிப் போட்டியில் ஆர்சிபி அணி வெற்றி பெறும் பட்சத்தில் இந்த வகை சாதனையில் அந்த அணியும் இணையும்.

ரூ.20 கோடி பரிசுத் தொகை

ஐபிஎல் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு சாம்பியன் கோப்பையுடன் ரூ.20 கோடி பரிசு வழங்கப்பட உள்ளது. 2-வது இடத்தை பெறும் அணி ரூ.12.50 கோடியை பரிசாக பெறும்.

‘தொடரை வெல்ல சிறந்த பந்துவீச்சு தேவை’

ஆர்சிபி அணியின் கேப்டன் ரஜத் பட்டிதார் கூறியதாவது: தொடரை வெல்ல விரும்பினால், உங்களுக்கு மிகச் சிறந்த பந்துவீச்சுப் படை தேவை. விக்கெட்டுகளை வீழ்த்துவது மிகவும் முக்கியம். ஏனெனில், 200 முதல் 220 ரன்கள் வரை எடுப்பது மிகவும் எளிது. ஆனால், அந்த ரன்களை எதிரணி அடிக்காமல் தடுத்து நிறுத்துவது மிகக் கடினம். எனவே, சிறந்த பந்துவீச்சு குழு இருக்க வேண்டியது அவசியம்.

புவனேஷ்வர் குமார் பிரமாதமாகப் பந்துவீசி வருகிறார். அவர், அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர். மதிப்புமிக்க இந்தத் தொடரில் சிறப்பாக பந்துவீசுவது என்பது அவ்வளவு எளிதல்ல. அவரிடம் ஆட்டத்தைப் பற்றிய மிகத் தெளிவான பார்வை இருக்கிறது. அவருடைய திட்டமிடல்களும் உத்திகளும் தெளிவாக உள்ளன.

புவனேஷ்வர் குமார், ஜோஷ் ஹேசில்வுட் போன்ற முன்னணி பந்துவீச்சாளர்கள் இருந்தாலும் மற்ற பந்துவீச்சாளர்களின் ஆதரவும் தேவைப்படுகிறது. அந்த வகையில், ரசிக் சலாம் திருப்புமுனைகளை ஏற்படுத்தி அணிக்கு உதவிய விதம் முக்கியமானது. ஏனெனில், வெறும் ஒன்றுஅல்லது இரண்டு பந்துவீச்சாளர்களை மட்டுமே வைத்துக் கொண்டு தொடரை வெல்ல முடியாது.

பில் சால்ட் விளையாடுவது குறித்து நாங்கள் இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை. தகுதி சுற்று 1 ஆட்டத்துக்கு பிறகு, எங்களுக்கு ஓய்வெடுப்பதற்கும் உடல்நலனை மீட்டெடுப்பதற்கும் போதுமான நேரம் கிடைத்தது. அதே நேரத்தில், குஜராத் டைட்டன்ஸ் அணி தகுதி சுற்று 2 போட்டியை முடித்துவிட்டு ஓய்வின்றி இறுதிப் போட்டியில் கலந்துகொள்கிறது. இந்த வகையில், எங்களுக்கு ஓரளவுக்குச் சாதகமான சூழல் இருக்கும், ஆனால் அது மிகப்பெரிய அளவில் இருக்காது. ஏனென்றால், இரண்டு அணிகளுமே மிகவும் பலமானவை, அதுமட்டுமின்றி மிகச் சிறந்த கிரிக்கெட்டையும் விளையாடி உள்ளோம். இவ்வாறு ரஜத் பட்டிதார் கூறினார்.

‘மன உறுதியே வெற்றி கொடுக்கும்’

குஜராத் டைட்டன்ஸ் அணியின் கேப்டன் ஷுப்மன் கில் கூறியதாவது: எதிர்பார்ப்புகளின் சுமையை நான் ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. நாங்கள் அகமதாபாத்தில் விளையாடும்போது எங்களுக்கு சில நன்மைகளும், நன்கு பழகிய சூழலும் கிடைக்கின்றன. ஏனெனில், இங்கிருக்கும் ஆடுகளத்தைப் பற்றியும், மைதானத்தைப் பற்றியும் நாங்கள் நன்றாக அறிவோம். எனவே, போட்டியில் வெற்றி பெற இங்கு எந்த மாதிரியான கிரிக்கெட்டை விளையாட வேண்டும் என்பதும் எங்களுக்கு தெளிவாகத் தெரியும். அந்த வகையில் சொந்த மைதானத்தில் விளையாடுவதை சாதகமான அம்சமாகவே பார்க்கிறேன். தகுதி சுற்று 1 போட்டி நடைபெற்ற தரம்சாலா என்பது சென்றடைவதற்கும், பயணம் செய்வதற்கும் சற்று கடினமான இடம். அதனால் உடல் ரீதியாக ஆர்சிபி அணி சாதகமான நிலையை பெற்றிருக்கலாம். ஆனால் இறுதிப் போட்டி என்பது முழுக்க முழுக்க மன உறுதி சார்ந்தது. சவாலை எதிர்கொள்ள மனரீதியாக யார் மிக உறுதியாக இருக்கிறார்களோ, அந்த அணியே வெற்றி பெறும்.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில், நாங்கள் ஒவ்வொரு ஓவரிலும் பவுன்சர்களை சிறப்பாகப் பயன்படுத்தினோம்.

நாங்கள் வீசிய பவுன்சர்களின் துல்லியத்தை இதற்கு முன்பு நான் டி20 போட்டியில் பார்த்தது இல்லை. நாங்கள் பயன்படுத்திய பவுன்சர்களின் எண்ணிக்கையும், அதன் மூலம் எங்களுக்குக் கிடைத்த வெற்றியும் உண்மையிலேயே அபாரமானது. இவ்வாறு ஷுப்மன் கில் கூறினார்.

# ஆர்செனலை வீழ்த்தி சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை தக்கவைத்தது பிஎஸ்ஜி

புடாபெஸ்ட்: நடப்பு யுஇஎஃப்ஏ சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் ஆர்செனல் அணியை வீழ்த்தி பட்டத்தை தக்கவைத்தது பிரான்ஸ் நாட்டின் பிஎஸ்ஜி கால்பந்து கிளப் அணி. ஐரோப்பாவில் நடைபெறும் மிகப்பெரிய கால்பந்து சாம்பியன்ஸ் லீக் தொடரில் (நடப்பு சீசன்) மொத்தம் 36 கால்பந்து கிளப் அணிகள் மோதின. இதில் இறுதிப் போட்டிக்கு, பிஎஸ்ஜி அணியும் ஆர்செனல் அணியும் தகுதி பெற்றன. இந்த ஆட்டம் ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட் நகரில் நடைபெற்றது.



சுமார் 22 ஆண்டுகளுக்கு பிறகு பிரீமியர் லீக் தொடரில் சாம்பியன் பட்டம் வென்றிருந்த ஆர்செனல், முதல் முறையாக சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை வெல்லும் நோக்கில் களம் கண்டது. மறுபக்கம் நடப்பு சாம்பியனான பிஎஸ்கே அணியோ பட்டத்தை தக்க வைக்க முனைப்பு காட்டியது. இந்த ஆட்டம் இந்திய நேரப்படி சனிக்கிழமை இரவு நடைபெற்றது. ஆட்டம் தொடங்கிய ஐந்தாவது நிமிடத்தில் கோல் பதிவு செய்து அசத்தினார் ஆர்செனல் வீரர் ஹாவர்ட்ஸ். அதன் பின்னர் பிஎஸ்ஜி அணி வீரர்கள் கோல் பதிவு செய்ய விடாப்பிடியாக முட்டி மோதினர். அதை லாவகமாக தங்களது தடுப்பாட்டம் மூலம் ஆர்செனல் வீரர்கள் தடுத்தனர். முதல் பாதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்செனல் முன்னிலையில் இருந்தது. அதன் பின்னர் இரண்டாவது பாதியின் 64-வது நிமிடத்தில் பிஎஸ்ஜி அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி கோல் பதிவு செய்தார் உஸ்மான் டெம்பலே. அதன் பிறகு இரு அணிகளும் கோல் பதிவு செய்யவவில்லை. இறுதியில் 90 நிமிடங்கள் மற்றும் ஸ்டாப்பேஜ் டைம் முடிந்த பிறகும் 1-1 என ஆட்டம் சமநிலையில் இருந்தது.

அதனால் மேலும் முப்பது நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்பட்டது. அதிலும் கோல் பதிவாகவில்லை. பிஎஸ்ஜி அணியின் கோல் முயற்சிகளை ஆர்செனல் கோல்கீப்பர் ரயான் தடுத்துக் கொண்டே இருந்தார். இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் பிஎஸ்ஜி அணி 4-3 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் ரியல் மாட்ரிட் அணிக்கு அடுத்ததாக தொடர்ந்து இரண்டு முறையாக சாம்பியன்ஸ் லீக் பட்டம் வென்ற அணியானது பிஎஸ்ஜி. அந்த அணியின் வெற்றியை பிரான்ஸில் உள்ள பிஎஸ்ஜி ரசிகர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

# ஆக.14-ல் சூர்யாவின் ‘விஸ்வநாத் அண்ட் சன்ஸ்’



‘கருப்பு’ படத்தின் வெற்றிக்குப் பிறகு சூர்யா நடிப்பில் வெளிவர இருக்கும் திரைப்படம், ‘விஸ்வநாத் அண்ட் சன்ஸ்’. தனுஷ் நடித்த ‘வாத்தி’, துல்கர் சல்மான் நடித்த ‘லக்கி பாஸ்கர்’ படங்களை இயக்கிய வெங்கி அட்லூரி இப்படத்தை இயக்கியுள்ளார்.

மமிதா பைஜு, ராதிகா சரத்குமார், ரவீனா டாண்டன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்துள்ளார். ஜி.வி.பிரகாஷ் இசை அமைத்துள்ள இப்படத்தின் டீஸர், ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வரவேற்பைப் பெற்றது. தமிழ், தெலுங்கில் வெளியாகும் இப்படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி ஆக.14-ம் தேதி இப்படம் வெளியாகிறது. தமிழ்நாட்டில் திங்க் ஸ்டூடியோஸ் இப்படத்தை வெளியிடுகிறது.

# வடசென்னை வாழ்வைச் சொல்லும் ‘ஆல் பாஸ்’



நிறங்கள் மூன்று, தருணம் போன்ற படங்களில் நடித்த துஷ்யந்த் நாயகனாக நடித்துள்ள படம், ‘ஆல் பாஸ்’. ஜனனி நாயகியாக நடித்துள்ளார். சரத் லோகித்சவா, ஜெயப்பிரகாஷ், செந்திகுமாரி, சுப்பிரமணிய சிவா, வினோதினி என பலர் நடித்துள்ளனர். ஜேம்ஸ் வசந்தன் இசை அமைத்துள்ளார்.

ஒன்ஸ் ஸ்டெப் என்டர்டெயின்மெண்ட் சார்பில் மோகனா.ஆர் தயாரித்துள்ள இப்படத்தை மைதீன் இயக்கியுள்ளார். படம் பற்றி அவர் கூறும் போது, ‘‘வடசென்னை என்றாலே அடிதடி, வெட்டு, குத்து, ரத்தம் என்றே தமிழ் சினிமாவில் காட்டி வந்திருக்கிறார்கள். இது எதுவுமே இல்லாத வடசென்னை மக்களின் எதார்த்த வாழ்வியலைப் பேசும் படம் இது. 45 நாட்கள் முழு படப்பிடிப்பையும் வடசென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் முடித்திருக்கிறோம். படப்பிடிப்பு நிறைவு பெற்ற நிலையில் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன’’ என்றார்.

# பேட்மிண்டன் விளையாட்டு பின்னணியில் ‘ரீமேட்ச்’



பேட்மிண்டனை மையமாகக் கொண்டு உருவாகும் காதல் கலந்த விளையாட்டு படத்துக்கு ‘ரீமேட்ச்’ என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் கேபிஒய் பாலா கதாநாயகனாக நடித்துள்ளார். தானு ஹர்ஷா கதாநாயகியாக தமிழில் அறிமுகமாகிறார். இவர் சிறந்த பேட்மிண்டன் வீராங்கனை. முக்கிய கதாபாத்திரங்களில் இளவரசு, சந்தோஷ் பிரதாப், ஷாரா, சஷாங்க், சித்ரா லட்சுமணன், செல்முருகன் உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள். அச்சு ராஜாமணி இசை அமைக்கிறார். அர்வி ஒளிப்பதிவு செய்கிறார். இயக்குநர் ராதா மோகனிடம் இணை இயக்குநராக பணியாற்றிய ஆர். விமல் குமார் எழுதி இயக்குகிறார். ஸினிமா மீடியா அண்ட் என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் தினேஷ் ராஜ், பிரகாஷ் சேஷாத்ரி, ஜி. ரவிகுமார் ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர்.

இதன் தொடக்க விழா சென்னையில் நடைபெற்றது. கலைப் புலி எஸ். தாணு, நடிகை மீனா, அருள்பதி, இயக்குநர்கள் சசி, ராதாமோகன், ஆர்.கண்ணன், மகேஷ் ராஜேந்திரன், நடிகர் கதிர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

Printed Published and Owned by Buchi Babu Vuppala, Printed At Thanmayee Printers, No:7,3 RD street, Krishna Nagar, Moouarasampet, Madipakkam Chennai-91, Tamil Nadu. Published from 8/5, Mannarswamy koil street, PULIANTHOPE, Chenni-600012, Tamil Nadu Editor: **H.MD. HARIEF,** mail: info.southindiatimes@gmail.com, phone.9000657700, **RNI Reg No. TNTAM/2018/75087.**